
தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 289 புரட்டாசி 06
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, திங்கள், செப்டம்பர் 22, 2025
சென்னை • மதுரை • திருச்சி • கோவை • நெல்லை • சேலம் • வேலூர் • புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**இதுவரை 7 போர்களை நிறுத்தியுள்ள தனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கொடுங்கள்: அதிபர் ட்ரம்ப்**
....2-ம் பக்கம்

**உலகப் புகழ்பெற்ற மைசூரு தசரா விழா இன்று தொடக்கம்**
....3-ம் பக்கம்

**பி.சி.சி.ஐ.-ன் புதிய தலைவராக பொறுப்பேற்கும் சி.எஸ்.கே. முன்னாள் வீரர் மிதுன் மனாஸ்?**
....6-ம் பக்கம்





● சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நபிகள் நாயகத்தின் 1500-வது பிறந்த நாள் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். இவ்விழாவில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, எஸ்.எம்.நாசர், முன்னாள் அமைச்சர் அ.அன்வர் ராஜா, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசிய தலைவர் கே.எம்.காதர்மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, தமிழ்நாடு வக்ப் வாரிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கே.நவாஸ்கனி, ஆற்காடு இளவரசர் நவாப் முகமது அப்துல் அலி மற்றும் அப்பல்லோ ஹனிபா, தமீமுன் அன்சாரி, நெல்லை முபாரக், அரசு தலைமை ஹாஜி முகம்மது அக்பர் உள்ளனர்.

### தூத்துக்குடியில் புதிதாக அமைகிறது:

# ரூ.30 ஆயிரம் கோடி முதலீட்டில் இரண்டு கப்பல் கட்டும் தளங்கள்

## தென் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, செப். 22-

**தூத்துக்குடியில் 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், 55 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறும் வகையில் இரு கப்பல் கட்டும் தளங்கள் அமையவுள்ளன என்றும் இவை தென் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் புதியதொரு அடித்தளமாக அமையும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழகத்தில் தூத்துக்குடியில் இரு கப்பல் கட்டும் தளங்களை நிறுவுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகி உள்ளன. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிப்காட் நிர்வாகமும் மற்றும் வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகமும் சில வாரங்களுக்கு முன்பு கையொப்பமிட்டன. இதன் மூலம் ரூ.30,000 கோடி முதலீடு செய்யப்பட்டு 55,000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட உள்ளதாக, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

**10 ஆயிரத்திற்கும்...**

மேலும் அவர் கூறுகையில், "கொச்சி ஷிப்யார்ட் நிறுவனம், உலக அளவிலான வணிகக் கப்பல் கட்டும் தளத்தை நிறுவ ரூ.15,000 கோடியை முதலீடு செய்யும். முதல்கட்டமாக 10,000-க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் நிறுவனமானது, ரூ.15,000 கோடி முதலீட்டில் மற்றொரு உலகளாவிய வணிகக்கப்பல் கட்டும் தளத்தை அமைக்கிறது.

**45 ஆயிரத்திற்கும்...**

இது 45,000-க்கும் மேற்பட்டோருக்கு (5,000 நேரடி மற்றும் 40,000 மறைமுக) வேலைவாய்ப்பை உருவாக்கும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், இந்தியாவின் கடல்சார் உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய நகர்வாக இருக்கும். இந்த இரண்டு மிகப்பெரிய திட்டங்களும் சேர்ந்து, கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார் கண்டுபிடிப்புகளுக்கான உலகளாவிய மையமாக தமிழகம் உருவெடுக்க வழிவகுக்கும்" என்று டி.ஆர்.பி. ராஜா தெரிவித்தார்.

**புதியதொரு அடித்தளம்**

இந்நிலையில் இது தொடர்பாக, முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில், "சங்கப்பாடல்கள் சொல்லும் கப்பற்கலையில் தமிழரின் பெருமைமிகு வரலாற்றை. இப்போது, தூத்துக்குடியில் 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், 55 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறும் வகையில் இரு கப்பல் கட்டும் தளங்கள் அமையவுள்ளன.

தென் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் புதியதொரு அடித்தளமாக இவை அமையும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

### பயணச்சீட்டிற்கு இனி பொதுமக்கள் காத்திருக்க வேண்டியதில்லை:

# 'சென்னை ஒன்' செயலி மூலம் பயணம் செய்யும் புதிய வசதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்

சென்னை, செப். 22-

**இந்தியாவிலேயே முதன் முறையாக 'சென்னை ஒன்' செயலி மூலம் பஸ், புறநகர் ரெயில், மெட்ரோ ரெயில் மற்றும் கேப், ஆட்டோக்களை ஒரே கியூஆர் கோடு பயணச் சீட்டு பயணம் செய்யும் வசதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார். பொது போக்குவரத்து சேவையில் ஒரு முக்கியமான முன்னெடுப்பான இதன் மூலம், இனி பொதுமக்கள் பயணச் சீட்டு பெற வரிசையில் காத்திருக்க தேவையில்லை.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் 2-வது ஆணையக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் சென்னைப் பெருநகரப் பகுதிக்கான 25 ஆண்டுகளுக்கான போக்குவரத்து திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதுடன் சென்னை பெருநகருக்கான ஒருங்கிணைந்த கியூஆர் கோடு பயணச்சீட்டு மற்றும் பயணத் திட்டமிடல் செயலியை இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான (5.904 சதுர கி.மீ.) விரிவான போக்குவரத்து திட்டம் 2023-2048. 'மக்களும் பொருட்களும் தங்கு தடையின்றி ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதை உறுதி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த, நிலையான, பாதுகாப்பான மற்றும் நெகிழ்வான போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை ஏற்படுத்துதல்' என்ற தொலைநோக்குப் பார்வையுடன், நகர்ப்புற போக்குவரத்து முயற்சிகளை முன்னெடுத்து செல்லும் வகையில் இந்த புதிய செயலி அமைகிறது.

இதன் மூலம் விரிவான போக்குவரத்து திட்டம் மூலம் பயண நேரத்தை மற்றும் பயண செலவைக் குறைத்தல், நம்பகமான, விரைவான பொதுப் போக்குவரத்தை வழங்குதல், பல்வகை பொதுபோக்குவரத்தை ஒருங்கிணைத்து வலுப்படுத்துதல், குறைந்த போக்குவரத்து உமிழ்வு மற்றும் பயணத்தேவை மேலாண்மையை ஊக்குவித்தல் போன்றவை கண்காணிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

இந்தியாவிலேயே முதன் முறையாக அனைத்து பொது போக்குவரத்தையும் இணைக்கும் வகையில் ஐ.ஓ.எஸ். மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக்கூடிய 'சென்னை ஒன் மொபைல் செயலியை' முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார். இந்த செயலி பஸ், புறநகர் ரெயில், மெட்ரோ ரெயில் மற்றும் கேப், ஆட்டோக்களை ஒரே கியூஆர் கோடு பயணச்சீட்டு மூலம் ஒருங்கிணைக்கிறது.

இதன் மூலம் பொதுமக்கள் பஸ்கள், மெட்ரோ மற்றும் புறநகர் ரெயில்களின் நிகழ்நேர இயக்கத்தை அறிந்து கொள்ளவும். யூ.பி.ஐ. அல்லது கட்டண அட்டைகள் வழியாக பயணச் சீட்டுகளை பெற்றிடவும். ஒரே பயணப் பதிவின் மூலம் அனைத்து போக்குவரத்து முறைகளிலும் பயணம் செய்யவும் முடியும். இச்செயலி ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் மக்கள் பயன்படுத்திடும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ளது. 'சென்னை ஒன் செயலி' பொது போக்குவரத்து சேவையில் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும். இனி பொதுமக்கள் பயணச் சீட்டு பெற வரிசையில் காத்திருக்க தேவையில்லை. இந்த செயலி மூலம் எளிதாக கட்டணம் செலுத்தி பயணச் சீட்டை பெற்று பயணம் செய்யலாம்.


### நாடு முழுவதும் இன்று முதல் புதிய ஜி.எஸ்.டி. அமல்:

# ஜி.எஸ்.டி. குறைப்பால் நாட்டில் மக்களின் சேமிப்பு அதிகரிக்கும்

## நாட்டு மக்களிடம் பிரதமர் நரேந்திர மோடி உரை

புதுடெல்லி, செப். 22-

**ஜி.எஸ்.டி குறைப்பால் நாட்டில் மக்களின் சேமிப்பு அதிகரிக்கும் என்று நாட்டு மக்களிடம் உரையாற்றிய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.**



ஜி.எஸ்.டி வரி சீர்திருத்தத்துக்கு பிறகு, வரி குறைப்பு மூலம் கிடைக்கும் பயன்களை நாட்டு மக்கள் இன்று (செப்.22) முதல் பெறலாம். இந்நிலையில், பிரதமர் மோடி நேற்று மாலை நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத வரி விதிப்பு, எச்1பி விசா விவகாரம், ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்த வேண்டும், இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியது அமெரிக்கா என ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு இந்தியாவுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்த நிலையில் நேற்று மாலை பிரதமர் மோடி நேரலையில் உரையாற்றினார்.

இதோடு எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி, வாக்கு திருட்டு விவகாரம் குறித்து மத்தியில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க. அரசு மீது குற்றச்சாட்டு வைத்துள்ளது. இந்தச் சூழலில்தான் பிரதமர் மோடி நேற்று பேசினார். அவர் பேசியதாவது., ஜி.எஸ்.டி குறைப்பால் நாட்டில் மக்களின் சேமிப்பு அதிகரிக்கும். ஜி.எஸ்.டி. சீர்திருத்ததால் நாட்டில் பொருளாதார வளர்ச்சி வேகமெடுக்கும் நாளை (இன்று) முதல் அடுத்த தலைமுறை ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்கள் அமலுக்கு வருகின்றன. நாளை (இன்று) முதல் மக்களின் சேமிப்பு அதிகரிக்கும். அவர்கள் விரும்பியதை வாங்கலாம். ஜி.எஸ்.டி. குறைப்பால் கோடிக்கணக்கான குடும்பங்கள் மகிழ்ச்சி அடையும்.

ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினர், மகளிர், விவசாயிகள், இளைஞர்கள் அவர்களுக்குப் பிடித்தமான பொருட்களை குறைக்கப்பட்ட விலையில் வாங்கலாம். இதனால், அனைத்து மாநிலங்களும் வளர்ச்சி நோக்கி முன்னேறும். சரக்கு போக்குவரத்தில் இருந்த தடைகளை தகர்க்கவே ஜி.எஸ்.டி. கொண்டு வரப்பட்டது. ஜி.எஸ்.டி.க்கு முன்பு வரி விதிப்பு விகிதம் சிக்கலானதாகவே இருந்தது. ஜி.எஸ்.டி. அமலாக்கம் இந்தியாவின் மிகப்பெரிய வரி சீர்திருத்தம். ஜி.எஸ்.டி. கொண்டுவரப்பட்டதன் மூலம் ஒரே நாடு ஒரே வரி என்ற கோடிக்கணக்கானோரின் கனவு நினைவானது.

நாளை (இன்று) ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் அமலாவதால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகமெடுக்கும். இந்த சீர்திருத்தம் மூலம் இந்திய பொருளாதாரத்தின் புதிய சகாப்தம் தொடங்குகிறது. இனி ஜி.எஸ்.டி.யில் 5%, 18% என இரண்டு வரம்பு மட்டுமே இருக்கும். இதனால், உணவு, மருந்து, வீட்டு உபயோகப் பொருட்களின் விலைகள் குறையும். கார், ஸ்கூட்டர் வாங்குவது எளிதாக்கப்படும். நடுத்தர மக்கள் தங்கள் இலக்குகளை எளிதாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். அவர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும்.

வருமான வரியிலும் சலுகை, ஜி.எஸ்.டி.யிலும் சலுகை அளித்துள்ளோம். 25 கோடி பேரை ஏழ்மையில் இருந்து மீட்டுள்ளோம். ஜி.எஸ்.டி. சீர்திருத்தத்தால், ஏழைகள், புதிய நடுத்தர வர்க்கத்தினராக தரம் உயர முடியும். சிறு, குறு வர்த்தக நிறுவனங்கள் பெருமளவில் பயனடைய முடியும். ஏன் சிறு கடைக்காரர் கூட பலனடையலாம். வருமான வரிச் சலுகை, ஜி.எஸ்.டி. குறைப்பால் மக்கள் 2.5 லட்சம் கோடி வரை மக்கள் செலவு குறைந்துள்ளது. ஜி.எஸ்.டி. வரி குறைப்பை நுகர்வோருக்கு கொண்டு செல்ல வியாபாரிகள் ஆர்வமாக உள்ளனர்

பொருட்களை முடிந்த வரை இந்தியாவிலேயே தயாரிக்க வேண்டும். அவை உலகத் தரம் மிக்கதாக இருக்க வேண்டும். இந்திய தயாரிப்புகளையே இந்தியர்கள் அதிகம் பயன்படுத்தும் நிலை வர வேண்டும். அப்போதுதான் சுய சார்பு இந்தியா இலக்கை எட்ட முடியும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நாளை நடைபெறுகிறது

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

சென்னை, செப். 22-

**தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கட்சியின் எம்.பி, எம்எல்ஏ.,க்கள் கூட்டம் நளை (செப்.23-ம் தேதி) நடைபெறும் என பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக துரைமுருகன் வெளியிட்ட அறிக்கையில், "தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 23.09.2025 செவ்வாய் கிழமை, காலை 10.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் நடைபெறும். அப்போது, தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

கடைசியாக, கடந்த ஜூலை 18-ம் தேதி, பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்கும் முன்னர் தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம் நடைபெற்றது.

அதன்பிறகு இப்போது எம்.பி, எம்.எல்.ஏ.,க்கள் கூட்டம் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வாக்கு திருட்டு புகாரை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைப்பு

## கர்நாடக அரசு நடவடிக்கை

பெங்களூரு, செப். 22-

**2023-ம் ஆண்டு கர்நாடக சட்டசபை தேர்தலின் போது மாநிலம் முழுவதும் பதிவான அனைத்து வாக்கு திருட்டு புகார் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழுவை கர்நாடக அரசு அமைத்துள்ளது.**

2023ம் ஆண்டு கர்நாடக சட்டசபை தேர்தலின்போது வாக்கு திருட்டு நடைபெற்றதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டி வருகிறார். இந்த குற்றச்சாட்டிற்கு தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்து வருகிறது.

இதனிடையே, கர்நாடகாவின் ஆலந்த் தொகுதியில் 2023 சட்டசபை தேர்தலின்போது 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாகவும், வாக்கு திருட்டு நடைபெற்றதாகவும் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக கர்நாடக சி.ஐ.டி. (குற்ற புலனாய்வு துறை) விசாரணை நடத்தி வருகிறது. இந்த விசாரணை தொடர்பாக குறிப்பிட்ட சில தரவுகளை அளிக்கும்படி மாநில தேர்தல் ஆணையத்திற்கு 18 முறை சி.ஐ.டி கடிதம் அனுப்பியது. ஆனால், இந்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றது என்று தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தேர்தலின் போது மாநிலம் முழுவதும் பதிவான அனைத்து வாக்கு திருட்டு புகார் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழுவை கர்நாடக அரசு அமைத்துள்ளது. ஆலந்த் தொகுதியில் நடைபெற்ற வாக்கு திருட்டு தொடர்பான வழக்கை விசாரித்து வரும் குற்ற புலனாய்வு துறை ஏ.டி.ஜி.பி. இந்த சிறப்பு புலனாய்வு குழுவுக்கு தலைமை தாங்குவார் என்று கர்நாடக அரசு தெரிவித்துள்ளது. இந்த குழு கர்நாடகாவில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் எழுந்த வாக்கு திருட்டு உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்து மாநில அரசுக்கு அறிக்கையாக தாக்கல் செய்ய உள்ளது.

# தமிழகத்தில் 5 நாட்கள் மழை பெய்ய வாய்ப்பு: வானிலை மையம் தகவல்

சென்னை, செப். 22-

**சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-**


தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இன்று முதல் 24-09-2025 வரை: வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

25-09-2025 முதல் 27-09-2025 வரை: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான/ மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32-33 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| -387.73 | -96.55 |
| பாயின்ட் 82,626.23 | பாயின்ட் 25,327.05 |



**தங்கம்**
1 சவரன் ₹82,320
1 கிராம் ₹10,290




**வெள்ளி**
1 கிலோ ₹145,000
1 கிராம் ₹145.00



**டாலர்** ₹88.09

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### இதுவரை 7 போர்களை நிறுத்தியுள்ள

# எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கொடுங்கள்: அதிபர் ட்ரம்ப்



**வாஷிங்டன், செப். 22-**

வர்த்தக ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியது உள்பட 7 போர்களை நிறுத்தியதற்காக எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மீண்டும் கூறியுள்ளார்.

கடந்த மே 10-ம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது சமூகவலைதளப் பக்கத்தில், இந்தியா - பாகிஸ்தான் போரை இரவு முழுவதும் நீடித்த மத்தியஸ்தத்தின் மூலம் முழுவதுமாக, உடனடியாக முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்தார். அதன் பின்னர் அதே கருத்தை 40 முறை சொல்லி விட்டார்.

சனிக்கிழமை இரவு நடந்த விருந்து நிகழ்வில் ஒன்றில் பேசிய ட்ரம்ப், "உலக அரங்கில் நாம் செய்துவரும் சில செயல்களால், நாம் இதற்கு முன்னர் இல்லாத அளவிலான மரியாதையை இப்போது பெற்று வருகிறோம். நாம் உலக நாடுகளுக்கு இடையே அமைதி ஒப்பந்தங்களை ஏற்படுத்தி வருகிறோம். போர்களை நிறுத்தி வருகிறோம். நாம் இந்தியா - பாகிஸ்தான், தாய்லாந்து - கம்போடியா உள்பட 7 போர்களை நிறுத்தியுள்ளோம்.

அதிலும், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போரை நான் எப்படி நிறுத்தினேன் தெரியுமா? வர்த்தகத்தை சுட்டிக் காட்டி நிறுத்தினேன். இந்தியா - பாகிஸ்தான், தாய்லாந்து - கமோடியா, அர்மேனியா - அஜர்பைஜான், கொசோவா - செர்பியா, இஸ்ரேல் - ஈரான், எகிப்து - எதியோபியா, ருவாண்டா - காங்கோ என 7 போர்களை நிறுத்தியுள்ளேன். இவற்றில் 60% போர்கள் வர்த்தக ஒப்பந்தங்களை முன்வைத்தே நிறுத்தப்பட்டன.

இப்போது, நான் ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்தினால், எனக்கு நோபல் பரிசு கிடைக்கும் என்றார்கள். அவர்களிடம், "அதான் 7 போர்களை நிறுத்திவிட்டேனே. ஒவ்வொரு போர் நிறுத்தத்துக்குமே ஒரு தனி நோபல் பரிசு தர வேண்டும், என்றேன்.". ஆனால், அவர்களோ, "ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்தினால் கிடைக்கலாம்." என்கிறார்கள்.

அது ஒரே ஒரு போர்தான். ஆனால் மிகப்பெரிய போர். ஆரம்பத்தில், புதின் என்னுடன் நல்ல உறவில் இருப்பதால், ரஷ்யா - உக்ரைன் போரை சிக்கிரமாகவே முடிக்கலாம் என நினைத்தேன். ஆனால் அது நடக்கவில்லை. அவர் என் நம்பிக்கையை ஏமாற்றிவிட்டார். இருப்பினும், ரஷ்யா - உக்ரைன் போரை எப்படியாவது நிறுத்துவோம்." என்று கூறியுள்ளார்.

### விர்ஜீனியா மாகாண

# வழக்கறிஞராக லிண்ட்சேவை நியமித்தார் அமெரிக்க அதிபர்

**வாஷிங்டன் டி.சி, செப். 22-**

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்று கொண்டது பிறகு நாட்டு முன்னேற்றத்திற்காக பல் வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். புதிய பொறுப்புகளை பலருக்கும் வழங்கி வருகிறார். அந்த வகையில், அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதிக்கான சிறப்பு உதவியாளராக பணியாற்றி வரும் லிண்ட்சே ஹல்லிகனை, விர்ஜீனியா மாகாணத்தின் கிழக்கு மாவட்டத்திற்கான வழக்கறிஞராக நியமித்து ட்ரம்ப் அறிவித்து உள்ளார்.

இதனை ட்ரூத் சோசியல் என்ற சமூக ஊடகத்தில் ட்ரம்ப் பகிர்ந்து இருக்கிறார். அதில், நீண்டகாலம் என்னுடைய பணியாற்றிய அனுபவம் கொண்ட லிண்ட்சே, கண்டிப்பான, திறன் படைத்த மற்றும் விசுவாசமிக்க வழக்கறிஞர் ஆவார். புளோரிடா மாகாணத்தில் பாம் பீச் பகுதியில் அமைந்துள்ள என்னுடைய வீட்டில் அரசியலமைப்புக்கு எதிராக, ஜோ பைடன் தலைமையிலான இடதுசாரி சிந்தனையுடனான ஜனநாயக கட்சி சோதனையில் ஈடுபட்டபோது, என்னுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர் லிண்ட்சே.

அறிவார்ந்த, பயமற்ற மற்றும் அட்டர்னி ஜெனரல் பாம் போண்டி மற்றும் உதவி அட்டர்னி ஜெனரல் டாட் பிளாஞ்ச் ஆகியோருடன் ஒன்றாக பணியாற்றியவர். நீங்கள் நீதிக்காகவும், விர்ஜீனியா மாகாணம் மற்றும் நம்முடைய நாட்டுக்காகவும் சிறந்த செயல்களை செய்வீர்கள். லிண்ட்சேவுக்கு வாழ்த்துகள் என தெரிவித்து உள்ளார். அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக உருவாக்குங்கள் என்றும் அவர் பதிவிட்டு உள்ளார்.

# நான் ஆளுங்கட்சிக்கு எதிரானவன் இல்லை: நடிகர் பார்த்திபன் பேச்சு

**கோவை, செப். 22-**

நான் ஆளுங்கட்சிக்கு எதிரானவன் இல்லை என்று பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

தனுஷ் இயக்கி நடித்துள்ள 'இட்லி கடை' படத்தின் ட்ரெய்லர் வெளியீட்டு விழா கோயம்புத்தூரில் நடைபெற்றது. இதில் பேசும் போது விஜய்யின் அரசியல் வருகை குறித்து பார்த்திபன் பேசினார். அவர் 'இட்லி கடை' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. பார்த்திபனின் பேச்சு இணையத்தில் வைரலானது.

இது தொடர்பாக பார்த்திபன் தனது எக்ஸ் தளத்தில், "இந்த ஸ்டேஜுக்கு வந்த பின், ஒரே சமயத்தில் 20 ஆயிரம் பேரின் கவன ஈர்ப்பின் ஸ்டேஜில் இருக்கும் போது, ஒவ்வொரு வார்த்தையையும் அளவெடுத்து பேசும் ஸ்டேஜில் இருக்கிறேன். யாரையும் புண்படுத்தாமல் யாவரையும் சந்தோஷப்படுத்த முடிவெடுத்தபடியே படியேறுகிறேன். இருப்பினும் அது ஒரு சார்பு நிலைக்குள் நிலை குத்தி நிற்கிறது.

மக்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு 5 வருடங்களும் முழுமையாக செயல்பட நாம் ஒத்துழைக்க வேண்டும். அதில் ஏற்படும் விருப்பு வெறுப்பை காட்ட 2026-ன் ஓட்டுப்பெட்டி இருக்கிறது. எனவே நான் ஆளும் கட்சிக்கு எதிரானவன் இல்லை. மக்களாட்சி எனில் மக்களுக்கும் அரசியல் தெரிந்திருக்க வேண்டும். அந்த வகையில் யார் அரசியலுக்குள் விஜயம் செய்தாலும் அவர்களை வாழ்த்த வேண்டும். போட்டி வலுத்தாலே ஆரோக்கிய அரசியல் அமையும். யாரிடமும் பெட்டி வாங்கிக் கொண்டு ஆதரவு ஆரத்தி எடுப்பது இல்லை.

அதற்காக பெட்டி பாம்பாக மூடிக் கொண்டும் இருப்பதில்லை. 'தில்'லை பேச்சில் மட்டுமே இல்லாமல் செயலிலும் காட்ட, பணத்துக்காக சோரம் போகாத நேர்மை வேண்டும்.அது என்னிடம் இருப்பதால்..." என்று தெரிவித்துள்ளார் பார்த்திபன்.

# நேபாள முன்னாள் பிரதமரை கைது செய்ய ஜென் இசட் போராட்ட குழு வலியுறுத்தல்

**காத்மாண்டு, செப். 22-**

நேபாளத்தில் போலீஸ் துப்பாக்கி சூட்டில் 19 பேர் பலியான சம்பவத்தில் முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி மற்றும் முன்னாள் உள்துறை மந்திரி ரமேஷ் லேகாக் ஆகியோரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று ஜென் இசட் குழு வலியுறுத்தி உள்ளது.

நேபாளத்தில் சமூக வலைத்தளங்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளை எதிர்த்து அந்நாட்டு ஜென் z இளைஞர்கள் செப்டம்பர் 8 ஆம் தேதி போராட்டத்தில் ஈடுபட்டனர். இளைஞர்கள் மீது போலீஸ் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 19 பேர் உயிரிழந்தனர். இதனால் போராட்டம் கலவரமாக மாறியது. இதைத்தொடர்ந்து செப்டம்பர் 9 அன்று சமூக வலைத்தளங்களுக்கு தடை நீக்கப்பட்டது. ஆனால் பிரதமர் பதவி விலக வேண்டும் என்று போராட்டக்காரர்கள் கோரினர். எனவே அன்றைய தினமே பிரதமர் சர்மா ஒலி பதவி விலகினார்.

இடைக்கால பிரதமராக அந்நாட்டு உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி சுசிலா கார்கி (73) பதவியேற்றார். இந்நிலையில் போலீஸ் துப்பாக்கி சூட்டில் 19 பேர் பலியான சம்பவத்தில் முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி மற்றும் முன்னாள் உள்துறை மந்திரி ரமேஷ் லேகாக் ஆகியோரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று ஜென் இசட் குழு வலியுறுத்தி உள்ளது. ஆனால் துப்பாக்கி சூட்டுக்கு தான் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்று கே.பி.சர்மா ஒலி தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நவராத்திரியில் இந்துக்களுக்கு மட்டுமே அனுமதி: வி.எச்.பி. கட்டுப்பாடுக்கு காங்கிரஸ் கட்சி கண்டனம்

**மும்பை, செப். 22-**

நவராத்திரியில் இந்துக்களுக்கு மட்டுமே அனுமதி என்று வி.எச்.பி. கட்டுப்பாடுக்கு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

நவராத்திரி விழா இன்று முதல் அக்டோபர் 1-ம் தேதி வரை கொண்டாடப்படுகிறது. இது குறித்து விஸ்வ இந்து பரிஷத் (வி.எச்.பி.) செய்தி தொடர்பாளர் ராஜ் நாயர் கூறியதாவது:- கர்பா நடன நிகழ்ச்சி மட்டும் அல்ல. இது கடவுளை மகிழ்விக்கும் வழிபாட்டு நிகழ்ச்சி. முஸ்லிம்களுக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லை. இந்து சடங்குகளில் நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே கர்பா நடன நிகழ்ச்சியில் பங்கேற்க அனுமதிக்கப்பட வேண்டும். நடன நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களின் பெயரை ஆதார் அட்டையில் சரிபார்த்து, அவர்கள் நெற்றியில் திலகமிட்டு பூஜைகள் செய்தபின் நிகழ்ச்சியில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை வி.எச்.பி. அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

மகாராஷ்டிரா காங்கிரஸ் கட்சி தலைவர் விஜய் வடேட்டிவர் கூறுகையில், "சமூகத்தில் தீயை மூட்டி, சமூகத்தை மதரீதியாக பிரித்து அரசியல் ஆதாயம் அடைய வி.எச்.பி. விரும்புகிறது. வி.எச்.பி. கூறுவது புதிதல்ல. நாட்டை நிலைக்குலைய வைக்கும் நோக்கத்தில்தான் இந்த அமைப்பே பிறந்தது. வி.எச்.பி..யின் நிலைப்பாடு, நாட்டின் அடித்தளமான வேற்றுமையில் ஒற்றுமை என்பதை தகர்க்கிறது. அரசின் நிலைப்பாடும் இதுதான்" என்றார்.

# அமெரிக்காவில் அமலுக்கு வந்த எச் 1-பி விசா கட்டணம் உயர்வு..!

## 71 சதவீதம் இந்தியர்கள் பாதிக்கப்படும் அபாயம்

**வாஷிங்டன், செப். 22-**

அமெரிக்காவில் அமலுக்கு வந்த எச் 1-பி விசா கட்டணம் உயர்வால் சுமார் 71 சதவீதம் இந்தியர்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த புதிய கட்டண உயர்வு நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

அமெரிக்காவின் எச் 1-பி விசாவுக்கான ஓராண்டு கட்டணம் ரூ.1.32 லட்சத்தில் இருந்து திடீரென ரூ.88 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், கணினி மென்பொருள் துறையில் பணியாற்றி வரும் ஏராளமான இந்தியர்கள் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. விடுப்புக்காக இந்தியா சென்றுள்ள ஊழியர்கள் உடனடியாக அமெரிக்காவுக்கு திரும்புமாறு ஐ.டி நிறுவனங்கள் உத்தரவிட்டுள்ளன.

அமெரிக்காவில் தற்காலிகமாக பணியாற்றுவோருக்கு எச் 1-பி விசா வழங்கப்படுகிறது. ஆய்வாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளிட்ட சிறப்பு பணித்திறன்கொண்டவர்களுக்கு மட்டுமே இந்த விசா வழங்கப்படும். ஓராண்டில் 65,000 எச் 1-பி விசாக்களை அமெரிக்க அரசு விநியோகம் செய்கிறது. மேலும், அமெரிக்க உயர் கல்வி நிறுவனங்களில் படித்த வெளிநாட்டு மாணவர்களுக்கு 20,000 எச் 1-பி விசா வழங்கப்படுகிறது. இதன்படி, ஓராண்டில் மொத்தம் 85,000 எச் 1-பி விசாக்கள் வழங்கப்படுகின்றன.

எச் 1-பி விசாவில் 7.50 லட்சம் பேர் இந்த விசாவை பெற்றவர்கள் அமெரிக்காவில் 3 ஆண்டுகள் வரை தங்கியிருந்து பணியாற்றலாம். தேவைப்பட்டால், மேலும் 3 ஆண்டுகள் வரை விசா காலத்தை நீட்டிக்க முடியும். சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, அமெரிக்காவில் எச் 1-பி விசாவில் சுமார் 7.50 லட்சம் பேர் பணியாற்றி வருகின்றனர். அவர்களது மனைவி, பிள்ளைகள் என சுமார் 6 லட்சம் பேர் அமெரிக்காவில் வசிக்கின்றனர். ஒட்டுமொத்தமாக எச் 1-பி விசா அடிப்படையில் அமெரிக்கா முழுவதும் 13.5 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் தங்கி உள்ளனர். இந்த விசாவை பெற்றவர்களில் சுமார் 71 சதவீதம் பேர் இந்தியர்கள்.

இந்நிலையில், ரூ.1.32 லட்சமாக உள்ள எச் 1-பி விசா கட்டணத்தை ரூ.88 லட்சமாக உயர்த்த வகை செய்யும் ஆணையில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். புதிய கட்டண நடைமுறை செப்டம்பர் நேற்று முதல் அமலுக்கு வந்தது. இதன்படி, எச் 1-பி விசாவுக்கு ஓராண்டுக்கு ரூ.88 லட்சம் கட்டணம் செலுத்தவேண்டும். இந்த புதிய நடைமுறையால் லட்சக்கணக்கான இந்தியர்கள், குறிப்பாக கணினி மென்பொருள் துறையினர் பாதிக்கப்படுவார்கள் என அஞ்சப்படுகிறது.

### கட்டண உயர்வு ஏன்?

அதிபர் ட்ரம்ப் கூறும்போது, "எச் 1-பி விசா தவறாக பயன்படுத்தப்படுகிறது. இதனால் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பண மோசடி சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த விசா நடைமுறையால் அமெரிக்கர்களுக்கு குறைவான ஊதியமே கிடைக்கிறது. அமெரிக்க குடும்பங்களின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே எச் 1-பி விசாவுக்கான கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது" என்றார்.

### நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையிடம்

# ரூ.1.25 லட்சம் கோடி கேட்டு அதிபர் டிரம்ப் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி

**வாஷிங்டன், செப். 22-**

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு எதிராக டிரம்ப் தொடர்ந்த 15 பில்லியன் டாலர் அவதூறு வழக்கை, அது தாக்கல் செய்யப்பட்ட விதத்தை காரணம் காட்டி நீதிபதி தள்ளுபடி செய்தார்.

பிரபல 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை, அதன் நான்கு பத்திரிகையாளர்கள் மற்றும் பதிப்பகம் மீது அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் 15 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் 1.25 லட்சம் கோடி ரூபாய்) நஷ்ட ஈடு கேட்டு அவதூறு வழக்கு தொடர்ந்திருந்தார்.

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையாளர்கள் எழுதிய புத்தகம் மற்றும் தனது நிதி நிலை குறித்த கட்டுரைகள் பொய்யானவை என்றும், தனது புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்குடன் வெளியிடப்பட்டதாகவும் டிரம்ப் குற்றம்சாட்டியிருந்தார். மேலும், அதிபர் தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும் முயற்சி இது என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், 85 பக்கங்கள் கொண்ட இந்த வழக்கை விசாரித்த புளோரிடா மாகாண மத்திய நீதிமன்ற நீதிபதி ஸ்டீவன் மெரிடே, அதனைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கு மனு, சட்ட விதிகளைப் பின்பற்றாமல், தேவையற்ற வசைபாடும் வார்த்தைகளுடன் மிக நீளமாக உள்ளது. 'நீதிமன்றம் என்பது அரசியல் பேரணிகளில் பேசுவதற்கான மேடையோ, விளம்பரத்திற்கான ஒலிபெருக்கியோ அல்ல' என்று நீதிபதி தனது உத்தரவில் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

### 4 ரிக்டர் அளவில்


# வங்காளதேசத்தில் நிலநடுக்கம்

**டாக்கா, செப். 22-**

4 ரிக்டர் அளவில் வங்காளதேசத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

வங்காளதேசத்தில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. காலை 11.49 மணியளவில் ரிக்டர் 4.0 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிவு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி, 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 25.04 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 91.57 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

**22-09-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எதிரிகள் பணிவர். எதிர்ப்புகள் விலகும். அரசியல் மற்றும் பொதுச் சேவை மூலம் லாபம் அடைவீர்கள். பெயரும், புகழும் கூடும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**ரிஷபம்:-** பயணத்தில் தடங்கல்கள் ஏற்படும். தொழில் அல்லது வியாபார மாற்றங்களால் பணவிரயம் ஏற்படும். பொதுச் சேவையில் ஈடுபாடு இருக்காது. பெரியவர்களை மதித்து நடப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும்.

**மிதுனம்:-** பணி மாற்றங்கள் ஏற்படலாம். தாயுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு கெடுபிடி இருக்கும். சிலருக்குப் பண இழப்புக்களும் ஏற்படலாம்.

**கடகம்:-** அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். செல்வ நிலை சீராக உயரும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். நீண்ட தூர அல்லது வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:-** கல்வியில் உங்கள் திறமைகளை காட்டினாலும் தடைகள் ஏற்படும். கௌரவ குறைச்சல் ஏற்படும். வீண் பேச்சுக்கள் பேசும் பெண்கள் மூலம் குழப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி:-** தொழில் மற்றும் வியாபாரத்தில் ஆதாயம் பெருகும். கற்பனை வளம் பெருகும். இனிய பயண சுகம் கூடும். பலவகையிலும் பணவரவு அதிகரிக்கும். புதிய நண்பர்கள் மூலம் நன்மை ஏற்படும்.

**துலாம்:-** பணியின் காரணமாக வேளாவேளைக்கு உண வருந்த முடியாத நிலை ஏற்படும். முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:-** நம்பத் தகுந்த அநேக நண்பர்கள் நட்புக் கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுச் சேவை மூலம் லாபம் அடைவீர்கள். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**தனுசு:-** தொழில் முன்னேற்றத்தால் இன்று உங்கள் மனதில் அமைதி நிலவும். பயணத்தில் ஆர்வம் ஏற்படும். பிறரை அதிகாரம் செய்யும் பதவி உயர்வு ஏற்படும். வியாபாரத்தில் பல வழிகளில் ஆதாயம் பெருகும்.

**மகரம்:-** தெய்வீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். கல்வியில் உங்கள் திறமைகளைக் காட்டி பரிசுகளைப் பெறுவீர்கள். அனைவராலும் மதிக்கப்படுவீர்கள்.

**கும்பம்:-** இஷ்டத்திற்கு மாறாகவே அனைத்தும் நடக்கும். தன் பணிவின்மையால் அதிகாரிகளிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதிருக்கும். பிறருக்கு நன்மை நினைத்தால் நன்மையே நடக்கும்.

**மீனம்:-** பொருளாதார நிலை உயர்ந்து பெரிய மனிதன் என்ற பெயர் நிலவும். பேச்சின் இனிமை கண்டு ஆண்கள் மயங்குவது உறுதி. அரசு மற்றும் அரசியல்வாதிகள் ஆதரவால் அனுகூலம் இருக்கும்.

### அ.தி.மு.க. கூட்டணிக்கு வருமாறு

# த.வெ.க. தலைவர் விஜய்க்கு ராஜேந்திர பாலாஜி அழைப்பு

**விருதுநகர், செப். 22-**

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி விஜய்க்கு அழைப்பு விடுத்துள்ளார். விஜய் பாஸ் மார்க் வாங்க வேண்டும் என்று சொன்னால் எடப்பாடியார் தலைமையில் இருக்கின்ற அ.தி.மு.க.வோடு கூட்டணி வைக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தமிழக வெற்றிக் கழகம் என்ற புதிய கட்சியைத் தொடங்கிய நடிகர் விஜய், தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். கடந்த வாரம் திருச்சியில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கிய விஜய், நேற்று முன்தினம் நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மக்களைச் சந்தித்து பிரசாரத்தில் ஈடுபட்டார்.

தி.மு.க.வை தனது அரசியல் எதிரி என்றும், பா.ஜ.க.-வை தனது கொள்கை எதிரி என்றும் கூறி வரும் த.வெ.க. தலைவர் விஜய் தனது முதல் அரசியல் மாநாடு முதல் தற்போதைய தேர்தல் பரப்புரையிலும் செல்லும் இடமெல்லாம் வரும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. - த.வெ.க.விற்கும்தான் போட்டி என்று மீண்டும் மீண்டும் பதிவு செய்து வருகிறார்.

இந்தநிலையில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி விஜய்க்கு அழைப்பு விடுத்துள்ளார். விஜய் பாஸ் மார்க் வாங்க வேண்டும் என்று சொன்னால் எடப்பாடியார் தலைமையில் இருக்கின்ற அ.தி.மு.க.வோடு கூட்டணி வைக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். இது தொடர்பாக விருதுநகரில் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

விஜய் தனித்து நின்று ஜெயிப்போம் என்று கூறுவது இந்த காலத்தில் மட்டுமல்ல எந்த காலத்திலும் நடைபெறாத ஆசை. அவர் முயற்சி எல்லாம் வீணாகும். விஜய் தனித்து நின்று களம் காண்போம் என்று கூறுவது தி.மு.க.விற்கு வலு சேர்க்கும் விதமாகத்தான் தமிழக மக்கள் பார்ப்பார்கள். அந்த நேரத்தில் தி.மு.க.விற்கு மாற்றாக அ.தி.மு.க.வை தான் மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

விஜய் தனித்து நின்று போட்டியிட்டால் தி.மு.க. தமிழக வெற்றிக் கழகத்தை அழித்துவிடும். விஜய்க்கு கூடும் கூட்டம் எல்லாம் வாக்குகளாக மாறாது. விஜய் நடிகர் என்பதால் அவரைப் பார்க்க நாங்கள் கூட செல்வோம். அஜித், சூப்பர் ஸ்டார் சார் ரஜினிகாந்த் வந்தால் விஜய்க்கு வரும் கூட்டத்தை விட இருமடங்கு கூட்டம் அதிக அளவில் வரும்.

தேர்தல் களத்தில் தி.மு.க. த.வெ.க.விற்கு மட்டுமே போட்டி என விஜய் கூறுவது உண்மைதான், இரண்டாவது இடத்திற்கு இரு கட்சிகளுக்கு போட்டி என்பதை விஜய் சொல்கிறார். களத்தில் அ.தி.மு.க.தான் வெற்றி பெறும். விஜய் தி.மு.க.வை எதிர்ப்பது உண்மையாக இருந்தால், தி.மு.க. ஆட்சியை தூக்கி எறிவேன் என்று விஜய் சொல்வது உண்மையாக இருந்தால் அவர் அ.தி.மு.க. கூட்டணியில் இணைய வேண்டும்.

விஜய் தனித்து நின்றால் த.வெ.க. அழிந்துவிடும். விஜய் பாஸ் மார்க் வாங்க வேண்டும் என்று சொன்னால் எடப்பாடியார் தலைமையில் இருக்கின்ற அ.தி.மு.க.வோடு கூட்டணி வைக்க வேண்டும். இல்லையென்றால் இந்த தேர்தலோடு விஜயை தி.மு.க. முடித்து விடும். விஜய் நன்றாக யோசித்து அ.தி.மு.க. கூட்டணிக்கு வரவேண்டும். அ.தி.மு.க.வின் பலம் மற்றும் அரசியல் அனுபவம் விஜய்க்குத் தேவை. நடிகர் என்ற பிம்பம் மட்டுமே வாக்குகளைப் பெற்றுத் தராது என்றும், சினிமா வேறு, அரசியல் என்பது வேறு எனத் தெரிவித்தார்.

### கொரோனா பரவலை முதலில் தெரிவித்த

# சீன பெண் பத்திரிகையாளருக்கு தண்டனை மேலும் நீட்டிப்பு..!

**பீஜிங், செப். 22-**

சீனாவில் கொரோனா தொற்று பரவியுள்ளதை பற்றி முதலில் தெரிவித்த பெண் பத்திரிகையாளருக்கு மேலும் 4 ஆண்டுகளுக்கு சிறைத் தண்டனை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் இருந்துதான் கொரோனா தொற்று பரவத் தொடங்கியதாக கூறப்படும் நிலையில், 42 வயதான ஜாங் ஜான் என்ற சீன பெண் பத்திரிக்கையாளர் கொரோனா ஆரம்பகால பரவல் குறித்து சீனாவின் வூஹான் நகரில் இருந்து நேரடி அறிக்கைகளை வெளியிட்டார்.

நெரிசலான மருத்துவமனைகள், வெறிச்சோடிய தெருக்கள் அடங்கிய காணொளிகள் உள்ளிட்ட பதிவுகளை வெளியிட்டார். இதையடுத்து, ஜாங் ஜான் மீது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்தார், மக்களிடையே விவாதத்தைத் தூண்டினார் என்று சீன அரசால் வழக்கு தொடரப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஜாங் ஜான் கைது செய்யப்பட்டார். டிசம்பர் 2020 -ல் அவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு சிறையில், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். இந்த நிலையில், 2024 மே மாதம் அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். இரண்டாவது முறையாக கைது செய்யப்பட்டபோது, ஜாங் என்ன நடவடிக்கைகளுக்காக குற்றம் சாட்டப்பட்டார் என்பதை சீன அதிகாரிகள் சரியாக குறிப்பிடவில்லை. இந்நிலையில் அவருக்கான சிறைத் தண்டனை தற்போது மேலும் 4 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. சீனாவின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஜாங் அறிக்கை வெளியிட்டதை தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை அவருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### உலகப் புகழ்பெற்ற
# மைசூரு தசரா விழா இன்று தொடக்கம்

**கர்நாடகா, செப். 22-**

கர்நாடகத்தில் கொண்டாடப்படும் பண்டிகைகளில் முதன்மையானது, மைசூரு தசரா விழா. கர்நாடகத்தின் 'நாடஹப்பா' என அழைக்கப்படும் தசரா விழா கலாசாரம், பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் மன்னர் காலத்தில் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. மைசூருவில் கொண்டாடப்படும் தசரா விழா உலக புகழ்பெற்று விளங்குகிறது.

வரலாற்று சிறப்புமிக்க தசரா விழா கடந்த 414 ஆண்டுகளாக கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் 415-வது ஆண்டாக இந்த ஆண்டு தசரா விழா செப்டம்பர் மாதம் 22-ந்தேதி (இன்று) தொடங்கி அக்டோபர் மாதம் 2-ந்தேதி வரை 11 நாட்கள் கோலாகலமாக நடக்கும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

அதன்படி இன்று (திங்கட்கிழமை) உலக புகழ்பெற்ற மைசூரு தசரா விழா கோலாகலமாக தொடங்குகிறது. இதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே அரசு சார்பில் அமைக்கப்பட்ட தசரா கமிட்டியினர் செய்து வருகிறார்கள். இந்த ஆண்டு தசரா விழாவை ஆடம்பரமாக கொண்டாட மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதையொட்டி மைசூரு நகரம் மற்றும் அரண்மனை முழுவதும் மின்விளக்கு அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. இளைஞர் தசரா, உணவு மேளா, தசரா கண்காட்சி, மலர் கண்காட்சி, திரைப்பட விழா, குழந்தைகள் தசரா உள்ளிட்டவை தொடங்க உள்ளது. இதில் இளைஞர் விழா ஏற்கனவே தொடங்கி நடந்து வருகிறது.

இன்று காலை சாமுண்டி மலையில் உள்ள சாமுண்டீஸ்வரி அம்மன் கோவிலில் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள், அபிஷேக ஆராதனைகள் நடக்கிறது. அதனையடுத்து அம்மன் கோவில் வளாகத்தில் உள்ள வெள்ளி தேரில் எழுந்தருளுகிறார். இதையடுத்து காலை 10.10 மணி முதல் காலை 10.46 மணிக்குள் சுப ரிஷிகா லக்கனத்தில் 'புக்கர்' விருது பெற்ற கன்னட எழுத்தாளர் பானு முஷ்தாக் சாமுண்டீஸ்வரி அம்மன் மீது மலர்களை தூவி தசரா விழாவை தொடங்கி வைக்கிறார். அதனை தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு பூஜை நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மைசூரு தசரா விழாவை பொதுவான நபர், பிரபலங்கள் தொடங்கி வைப்பது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு கடும் எதிர்ப்புக்கு மத்தியில் எழுத்தாளர் பானு முஷ்தாக் தசரா விழாவை தொடங்கி வைக்க உள்ளார்.

தொடக்க விழாவில் முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவக்குமார், மன்னரும், மைசூரு-குடகு தொகுதி எம்.பி.யுமான யதுவீர் மற்றும் மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சாமுண்டீஸ்வரி அம்மனுக்கு பூக்களை தூவி வணங்குகிறார்கள்.

# விஜய்க்கு வருகின்ற கூட்டம் கண்டிப்பாக ஓட்டாக மாறாது
### நடிகர் கமல்ஹாசன் ஆருடம்



**சென்னை, செப். 22-**

விஜய்க்கு கூடுகிற கூட்டம் கண்டிப்பாக ஓட்டாக மாறாது என்று கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

ம.நீ.ம. தலைவரும், மாநிலங்களவை எம்.பி.யுமான கமல்ஹாசன் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது: நடிகர்கள் அரசியலுக்கு வருவதால் மட்டும் விமர்சனங்கள் எழுவதில்லை. நடிக்க வந்தாலும் விமர்சனங்கள் எழும். விஜய்க்கு கூடுகிற கூட்டம் கண்டிப்பாக ஓட்டாக மாறாது. அது அனைத்து தலைவர்களுக்கும் பொருந்தும்.

இது விஜய்க்கும் பொருந்தும். எனக்கும் பொருந்தும். நல்ல பாதையில் செல்லுங்கள், தைரியமாக முன்னேறுங்கள். மக்களுக்காக செய்யுங்கள் என்பதுதான் நான் எல்லா அரசியல்வாதிகளுக்கும் வைக்கும் வேண்டுகோள். நான் குடிமகனாக இருந்தாலும் இதே வேண்டுகோளைதான் முன்வைத்திருப்பேன். இவ்வாறு அவர் பேசினார்.

# த.வெ.க.வுக்கு பெருகும் ஆதரவால் பயந்து பொய்யை பரப்புகின்றனர்
### விஜய் கடும் விமர்சனம்



**சென்னை, செப். 22-**

நம்மைப் பற்றி, ஆள் வைத்துப் பொய்யான கதையாடல்களைச் செய்தோர், செய்வோர், ஒவ்வொரு நாளும் மக்களிடையே நமக்குப் பெருகி வரும் அங்கீகாரத்தைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். அதனாலேயே, மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு யாருக்கும் விதிக்காத கடுமையான விதிமுறைகளை நமக்கு விதிக்கின்றனர். 1967 மற்றும் 1977 தேர்தல்களின் வெற்றி விளைவை 2026 தேர்தலிலும் நிகழ்த்திக் காட்டுவோம்." என்று த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொண்டர்களுக்கு அவர் நேற்று (செப்.21) எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: "வாகை சூடும் வரலாறு திரும்புகிறது; உங்க விஜய் நான் வரேன்" என்ற நம் மக்கள் சந்திப்பை, பல்வேறு அரசியல் திருப்புமுனைகளை அமைத்துத் தந்த திருச்சியில் திக்கெட்டும் கேட்கும் வகையில் கடந்த வாரம் (13.09.2025) தொடங்கினோம்.

இரண்டாவது வாரமாக, மீனவச் சொந்தங்கள் மற்றும் மும்மதங்களையும் போற்றி, மத நல்லிணக்கத்தைப் பேணிக் காக்கும் நம் நாகப்பட்டினம் மாவட்ட மக்களையும், உலகுக்கே உணவூட்டும் உழவர் பெருமக்களாகிய திருவாரூர் மாவட்ட மக்களையும் நேற்று சந்தித்தோம்.

நம்மைப் பற்றி, ஆள் வைத்துப் பொய்யான கதையாடல்களைச் செய்தோர், செய்வோர், ஒவ்வொரு நாளும் மக்களிடையே நமக்குப் பெருகி வரும் அங்கீகாரத்தைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். இந்த நடுக்கத்தினாலேயே நாம் நமது மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு அனுமதி கேட்கும் பொழுதெல்லாம் யாருக்கும் விதிக்காத கடுமையான விதிமுறைகளை நமக்கு விதிக்கின்றனர்.

ஆனால், நாம் நம் கொள்கைத் தலைவர்களின் வழியில் முதன்மைச் சக்தியாக, உண்மையான மக்களாட்சியை அமைத்திட நம் பணிகளை இன்னும் தீவிரப்படுத்துவோம். இந்த எழுச்சிமிகு தருணத்தைச் சாத்தியமாக்கிய அனைவருக்கும் நன்றி. நேற்றைய மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின் போது, முழு ஒத்துழைப்பு நல்கிய நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் குழு, தன்னார்வலர்கள் குழு, தனியார் பாதுகாவலர்கள் குழு, மருத்துவக் குழு ஆகியவற்றுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

மேலும் நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்ட மக்கள் நமக்களித்த வரவேற்பும் நம் மீது காட்டிய அன்பும் பாசமும் நிகரில்லாதவை. இவை எக்காலத்திற்கும் என் நெஞ்சில் நீங்கா இடம்பிடித்திருக்கும். இவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டுள்ளேன். இதற்காக எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது.

தமிழ்நாட்டு மக்களுக்கான முதன்மைச் சக்தியான நாம், அவர்களுக்காக எதிலும் சமரசம் செய்துகொள்ள மாட்டோம். 1967 மற்றும் 1977 தேர்தல்களின் வெற்றி விளைவை 2026 தேர்தலிலும் நிகழ்த்திக் காட்டுவோம். புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம். நல்லதே நடக்கும்.வெற்றி நிச்சயம். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### எச்1-பி விசா திடீர் கட்டண உயர்வால்
# மனிதாபிமான விளைவுகள் ஏற்படும்: மத்திய அரசு கருத்து




**புதுடெல்லி, செப். 22-**

எச்1-பி விசா திடீர் கட்டண உயர்வால் மனிதாபிமான விளைவுகள் ஏற்படும் என்று மத்திய அரசு கருத்து தெரிவித்துள்ளது. இந்திய தொழிலாளர்கள் அதிக அளவில் பயன்பெறும் எச்1-பி விசாவுக்கான கட்டணத்தை சுமார் ரூ.88 லட்சமாக அமெரிக்கா உயர்த்தி இருக்கிறது. இது இந்தியாவில் அரசு மற்றும் மக்களிடையே பெரும் அதிர்வலைகளை கிளப்பி இருக்கிறது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை குறித்து வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில், 'எச்1-பி விசா கட்டண உயர்வு இந்திய குடும்பங்களுக்கு ஏற்படுத்தும் இடையூறுகள் மூலம் மனிதாபிமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என தெரிவித்தார். மேலும், இந்த இடையூறுகளை அமெரிக்க அதிகாரிகள் தகுந்த முறையில் நிவர்த்தி செய்ய முடியும் என மத்திய அரசு நம்புவதாகவும் அவர் கூறினார்.

### தாதாசாகேப் பால்கே விருது அறிவிப்பு:
# வாழ்த்திய பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்த மோகன்லால்



**திருவனந்தபுரம்,செப். 22-**

தனக்கு தாதாசாகேப் பால்கே விருதை மத்திய அரசு அறிவித்த நிலையில், அதற்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடிக்கு நடிகர் மோகன்லால் நன்றி தெரிவித்துள்ளார்.

மலையாள திரையுலகின் சூப்பர் ஸ்டார் மோகன் லால்-க்கு தாதாசாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயரிய விருது வரும் 23ம் தேதி அன்று மோகன் லால்-க்கு விருது வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. அதாவது, 71வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் விருது வழங்கப்படுகிறது.

இந்நிலையில், நடிகர் மோகன் லால்-க்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் தள பக்கத்தில் மலையாளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார். அந்த பதிவில், "திறமை மற்றும் நடிப்பு பன்முகத்தன்மையின் சின்னம் மோகன் லால். பல தசாப்தங்களாக நீடித்த தனித்துவமான கலை வாழ்க்கையைக் கொண்ட அவர், மலையாள சினிமா மற்றும் நாடகத்துறையில் ஒரு முக்கிய நபராக இருந்து வருகிறார்.

மேலும், கேரள கலாச்சாரத்தின் மீது ஆழ்ந்த ஆர்வம் கொண்டவர். தெலுங்கு, தமிழ், கன்னடம் மற்றும் இந்தி படங்களிலும் அவர் சிறந்து விளங்கியுள்ளார். திரைப்படம் மற்றும் நாடக ஊடகங்களில் அவரது திறமை உண்மையான உத்வேகம் அளிக்கிறது. தாதாசாகேப் பால்கே விருது பெறுவதற்கு அவருக்கு வாழ்த்துக்கள். அவரது சாதனைகள் வருங்கால தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கட்டும்" என்று தெரிவித்தார்.

இதனையடுத்து வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடிக்கு மோகன்லால் நன்றி கூறியுள்ளார். இதுகுறித்து அவர் தனது எக்ஸ் பதிவில், "தாதா சாகேப் பால்கே விருதைப் பெறுவதில் நான் மிகவும் பணிவாகவும், மிகுந்த மரியாதையுடனும் இருக்கிறேன். உங்கள் அன்பான வார்த்தைகள் மற்றும் ஆசீர்வாதங்களுக்காக பிரதமர் நரேந்திர மோடி ஜிக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

அவை என்னை ஊக்கத்தாலும் மகிழ்ச்சியாலும் நிரப்புகின்றன. சினிமா கலைக்கும், எனது பயணத்தை ஒளிரச் செய்த அனைவருக்கும் நான் எப்போதும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# நடிகர் எஸ்.வி. சேகர் வீட்டிற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, செப். 22-**

நடிகர் எஸ்.வி. சேகர் வீட்டிற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து திரையுலகில் தனக்கென தனி இடம் பிடித்தவர் எஸ்.வி சேகர். முன்னதாக இவரது வீட்டிற்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனையடுத்து வெடிகுண்டு நிபுணர்கள் நடத்திய சோதனையில் அவரது வீட்டில் எந்த வித வெடிகுண்டும் கண்டுபிடிக்கப்படவில்லை, எனவே வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என தெரியவந்தது.

இந்த நிலையில், வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு ஒரு வாரம் கூட ஆகாத நிலையில், தற்போது எஸ்.வி. சேகர் வீட்டிற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. தகவலறிந்த போலீசார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாய் உதவியுடன் எஸ்.வி.சேகர் வீட்டில் சோதனை நடத்தினர். ஒரே வாரத்தில் இரண்டு முறை நடிகர் எஸ்.வி. சேகர் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### கேரளாவில் மகாவிஷ்ணு கோவிலில்
# பிரியங்கா காந்தி துலாபாரம்



**திருவனந்தபுரம், செப். 22-**

கேரளாவில் மகா விஷ்ணு கோவிலில் பிரியங்கா காந்தி துலாபாரம் மூலம் வழங்கி நேர்த்திக்கடன் செலுத்தினார்.

கேரள மாநிலம் வயநாடு பாராளுமன்ற தொகுதி எம்.பி. பிரியங்கா காந்தி கடந்த ஒரு வாரமாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு வருகிறார். மேலும் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோரும் டெல்லியில் இருந்து தனி ஹெலிகாப்டரில் வயநாட்டுக்கு வந்தனர்.

இந்தநிலையில் பிரியங்கா காந்தி மலப்புரம்-கோழிக்கோடு மாவட்டங்களின் எல்லையான முக்கம் மனாசேரியில் உள்ள ஸ்ரீகுன்னத்து மகாவிஷ்ணு கோவிலுக்கு சென்றார். அங்கு அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் தாம்பூல தட்டில் துளசி மாலையுடன் பிரியங்கா காந்தி எம்.பி. மனம் உருகி பயபக்தியுடன் சாமியை வழிபட்டார்.

பின்னர் தனது எடைக்கு நிகராக நேந்திரன் வாழைப் பழங்களை துலாபாரம் மூலம் வழங்கி நேர்த்திக்கடன் செலுத்தினார். தொடர்ந்து கோவிலில் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்ட தேரை பார்வையிட்டார். அப்போது அதில் செய்யப்பட்டுள்ள மர வேலைப்பாடுகளை கண்டு வியந்தார். தொடர்ந்து தேரை வடிவமைத்த சிற்பிகளை சந்தித்து பாராட்டினார். பின்னர் கோவிலை சுற்றி பார்வையிட்டார். அப்போது கோவிலுக்கு வந்த பெண்கள் உள்பட பக்தர்களுடன் பிரியங்கா காந்தி கலந்துரையாடினார்.

### முந்தைய தலைவர்களால்
# 'ஆபரேஷன் சிந்தூரை' நடத்தியிருக்க முடியுமா?
### தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கேள்வி

**சென்னை, செப். 22-**

'ஆபரேஷன் சிந்தூர்' போன்ற நடவடிக்கைகள், இதற்கு முந்தைய தலைவர்களால் செய்திருக்க முடியுமா? தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை ஐ.ஐ.டி. மற்றும் 'திங்க் இந்தியா' மாணவர் அமைப்பின் சார்பில், சென்னை ஐ.ஐ.டி வளாகத்தில் 'தக்சின் பதா மாநாடு' 2 நாட்கள் நடக்கிறது. இதன் தொடக்க நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியில், கவர்னர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டை தொடங்கி வைத்தார். 'தேச மறுமலர்ச்சிக்கான தொழில் முனைவு மற்றும் செயற்கை நுண்ணறிவு' என்ற தலைப்பில், இளம் சிந்தனையாளர்கள், தொழில்முனைவோர்கள், செயற்கை நுண்ணறிவு வல்லுனர்கள் விவாதிக்கின்றனர்.

இந்த விழாவில் கவர்னர் ஆர்.என்.ரவி பேசியதாவது:- இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் மிகவும் அமைதியான மாநிலங்களாக இருந்தன. ஆனால், சுதந்திரம் பெற்ற 10 ஆண்டுகளில் அங்கு வன்முறை வெடித்தது. மொழி, இன பிரச்சினைகள் உருவாகின. 1947-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரை இந்தியாவில் வன்முறை இருந்தது. 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் மக்கள் வரையில் ஒவ்வொரு ஆண்டும் வன்முறையால் இறந்தார்கள்.

அதேபோல், ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி. தற்போது, பெரும் பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால், தொடர்ந்து பிரச்சினைகள் நீடிக்கின்றன. 1960-களில் மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் அதிகம் காணப்பட்டது. 2014-ம் ஆண்டு தேசத்தை நேசிக்கும் தலைமை உருவான பிறகு நாட்டில் வன்முறை குறைந்துள்ளது.

சுதந்திரத்தின்போது இந்தியா 6-வது பொருளாதார மிக்க நாடாக இருந்தது. அதுவே கடந்த 2014-ம் ஆண்டில் 11-வது இடத்துக்கு பின் தங்கியது. 2014-க்கு பிறகு, புதிய இந்தியா பிறந்தது. 2014-ல் வறுமை கோட்டிற்கு கீழ் 30 சதவீதம் மக்கள் இருந்தனர். அந்த எண்ணிக்கை, தற்போது 4 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆண்டுகளில், 25 கோடி மக்கள் வறுமைக் கோட்டில் இருந்து வெளிவந்துள்ளனர். இந்தியாவின் ஆன்மா ஆன்மிகம். பாரதம் ஒரு தனி நாடு கிடையாது. நம் நாட்டின் சில அமைப்புகள் மீது பலர் பொய்யான கருத்துகளை பரப்புகிறார்கள், அதை சிதைக்க முயல்கிறார்கள். எதிரிகளிடம் இருந்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

நம் ராணுவம் வெளிநாட்டு ஆதாரங்களையே சார்ந்திருந்தது. இதற்காக, ஒப்பந்தங்கள் செய்ய நம் தலைவர்கள் முன்பு துணிவு காட்டவில்லை. 'ஆபரேஷன் சிந்தூர்' போன்ற நடவடிக்கைகள், இதற்கு முந்தைய தலைவர்களால் செய்திருக்க முடியுமா? சாத்தியம் கிடையாது. பாகிஸ்தானின் அணு ஆயுத மிரட்டல்களுக்கு அப்போது தயங்கினர். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், நானோ டெக்னாலஜி, ரோபோடிக்ஸ் இவற்றைக் கற்றுக்கொண்டு, வளர்ச்சி திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பேசினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### பிரதமரின் தாயாரை அவமதித்ததாக
# ஆர்.ஜே.டி. மீது பா.ஜ.க. மீண்டும் குற்றச்சாட்டு

**புதுடெல்லி, செப். 22-**

பிரதமர் மோடியின் தாயாரை ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியினர் அவமதித்ததாக பா.ஜ.க. மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது. அதோடு, "ஒரு தாயை துஷ்பிரயோகம் செய்தவர்களை பீகார் ஒருபோதும் மறக்காது" என்றும் தெரிவித்துள்ளது.

பீகாரில் இந்த ஆண்டு இறுதியில் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், பீகார் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. இதனிடையே, ராஷ்டிரிய ஜனதா தளத்தின் சார்பில் நடைபெற்ற பேரணியில் பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென் மோடி அவமதிக்கப்பட்டதாக பா.ஜ.க. சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஒரு வீடியோவும் இணையத்தில் பேசு பொருளானது. கட்சித் தொண்டர்களின் இந்த அவமதிப்பு நடவடிக்கையை தேஜஸ்வி யாதவ் ஆதரித்ததாகவும் சொல்லப்படுகிறது.

இந்நிலையில், அம்மாநிலத்தின் துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரி இது குறித்து தனது எக்ஸ் தளத்தில், "தேஜஸ்வி யாதவ் மீண்டும் மோடியின் மறைந்த தாயாரை அவமதித்துள்ளார். அவர் பீகாரின் கலாச்சாரத்தை அவமதித்துள்ளார். இது தாய்மார்களின் உச்சபட்ச விரக்தியை தூண்டியுள்ளது. ஒரு தாயை துஷ்பிரயோகம் செய்தவர்களை பீகார் ஒருபோதும் மறக்காது. பீகார் மக்கள் இந்த மோசமான அரசியலை நன்கு புரிந்துகொள்கிறார்கள், மேலும் ஜனநாயக முறையில் பதிலளிப்பார்கள்." என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராயும், தேஜஸ்வி யாதவ் மீது கடுமையான தாக்குதலை தொடுத்துள்ளார். தேஜஸ்வியை புராணக் கதாபாத்திரங்களான "கன்ஸ்" மற்றும் "காலியா நாக்" உடன் ஒப்பிட்டு, வாக்காளர்கள் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்றும் எச்சரித்தார்.

# பாரதிய ஜனதா எந்த உட்கட்சி பிரச்சினையிலும் தலையிடாது
### நயினார் நாகேந்திரன் திட்டவட்டம்

**சென்னை, செப். 22-**

"அரசியலில் நிரந்தரமாக நண்பர்களும் கிடையாது, பகைவர்களும் கிடையாது. பா.ஜ.க. நிச்சயமாக எந்த உட்கட்சி பிரச்சினையிலும் தலையிடாது" என தமிழக பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை தமிழக பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்தார். பின்னார் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

அரசியலில் நிரந்தரமாக நண்பர்களும் கிடையாது, பகைவர்களும் கிடையாது. அதுமட்டுமில்லாமல் தேர்தலுக்கு இன்னும் ஆறு ஏழு மாதங்கள் உள்ளன. தற்போது திமுக சார்பில் `உங்களுடன் முதல்வர்' என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிகாரிகள் தான் வீதி வீதியாக சென்று கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் மக்களுக்கு எந்த பயனும் கிடைப்பதாக தெரியவில்லை. மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது. ராசிபுரத்தில் இபிஎஸ் பேசிய கூட்டத்தில் கூட 30,000 மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மக்களின் எழுச்சி எங்கள் கூட்டணி பக்கம் தான் இருக்கிறது. டெல்லியில் அமித் ஷா உடன் பழனிசாமி பேசியது குறித்து ஆலோசிக்கவில்லை. மரியாதை நிமித்தமாக பழனிசாமியை சந்தித்து பேசினேன்.

அரசியலில் ஒருவரின் கருத்தை நிரந்தரமாக ஆதரித்தும், எதிர்த்தும் பேச முடியாது. தமிழகத்தில் வட மாவட்டம், தென் மாவட்டம் எனப் பிரிக்க வேண்டிய தேவையே கிடையாது. கொங்கு நாடாக இருந்தாலும் சரி, வடக்கு பகுதியாக இருந்தாலும் சரி தமிழகத்தில் ஆட்சி மாற்றம் உறுதியாக நடக்கும்.

வருகின்ற 11ஆம் தேதி எனது சுற்றுப்பயணத்தை ஆரம்பிக்க இருக்கிறேன். உத்தேசமாக மதுரையிலிருந்து ஆரம்பிக்கலாம் என இருக்கிறேன். பா.ஜ.க. நிச்சயமாக எந்த உட்கட்சி பிரச்சினையிலும் தலையிடாது" என்றார்.

# ஜனாதிபதி திரௌபதி அடுத்த மாதம் சபரிமலை வருகிறார்


**திருவனந்தபுரம், செப். 22-**

ஜனாதிபதி திரௌபதி முர்மு அடுத்த மாதம் சபரிமலை வருகிறார்.

கேரள தேவசம்போர்டு அமைச்சர் வாசவன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது, ஜனாதிபதி திரௌபதி முர்மு அடுத்த மாதம் சபரிமலை வர உள்ளதாக தெரிவித்தார்.


துலாசம பூஜைக்காக ஜனாதிபதி திரௌபதி முர்மு வர இருப்பதாகவும், இது பற்றி கவர்னர் மாளிகையில் இருந்து தகவல் வந்துள்ள நிலையில், சரியான தேதி விவரம் தெரியவரவில்லை. அதேநேரம் அவர் எந்த நாளில் வந்தாலும் வரவேற்க கேரள அரசும் தேவசம் வாரியமும் தயாராக உள்ளதாக அவர் கூறினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




எங்களது கட்சியின் நிலைபாட்டை டிசம்பர் மாதம் தெரிவிப்போம். 2006 சட்டப்பேரவைத் தேர்தலில் விஜயகாந்த் எப்படி ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினாரோ, அதைவிட அதிகமான தாக்கத்தை விஜய் ஏற்படுத்துவார். உங்களின் கணிப்பைத்தாண்டி தவெகவின் தாக்கம் அதிகமாக இருக்கும்.

- டி.டி.வி .தினகரன்




விஜய் என்னை விமர்சித்தார். எனவே, நான் அவரை விமர்சிக்கும் நோக்கில் பல்வேறு கேள்விகளை கேட்கிறேன். ஆனால், அவரால் பதில் சொல்ல முடியவில்லை. அரசியலுக்கு வந்த பின்னர் அனைவரின் கேள்விகளுக்கும் பதில் அளிக்க வேண்டும். ஆனால், எழுதி வைத்து படிக்கும் விஜயால் எனது கேள்விக்கு பதில் அளிக்க முடியாது.

- சீமான்



ஆசிரியர்களுக்கும் மக்களுக்காக பணியாற்றுபவர்களின் நியாயமான கோரிக்கையை கிடப்பில் போடுவது ஏற்புடையது அல்ல. கடந்த 22 ஆண்டுகளாக போராடிவரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் தமிழகத்தில் பழைய ஓய்வு திட்டத்தை உடனே நடைமுறைப்படுத்த அரசு முன்வர வேண்டும்.

- ராமதாஸ்



அ.தி.மு.க. அணிகள் இணைப்பு தொடர்பாக காலம் வரும்போது சொல்கிறேன். அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நண்பனும் இல்லை. தமிழ்நாட்டில் 2026-ம் ஆண்டு ஆட்சி மாற்றம் வருவது உறுதி. விஜய்க்கு வரும் கூட்டத்தை வைத்து தி.மு.க. - த.வெ.க. இடையேதான் போட்டி என விஜய் சொல்லக்கூடாது.

- நயினார் நாகேந்திரன்

# பெரம்பலூர் மாவட்டத்தில் கல்விகடன் முகாமில் 36 மாணவர்களுக்கு ரூ.2.74 கோடி மதிப்பிலான கல்விக் கடன் உதவிகள்

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்



**பெரம்பலூர்,செப்.22-**

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் அனைத்து வங்கிகள் இணைந்து நடத்திய கல்விகடன் முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலெக்டர் ந.மிருணாளினி தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக துணை மருத்துவ அறிவியல் கல்லூரி கூட்ட அரங்கில் (20.09.2025) தொடங்கி வைத்து கடனுதவிகளை வழங்கினார். இம்முகாமில், பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு கல்விக் கடன் வேண்டி 421 மனுக்கள் வழங்கினர்.

இம்முகாமில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

மாணவ, மாணவிகளின் உயர்கல்விக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருந்துவிடக்கூடாது என்ற உயரிய நக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் போன்ற பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். அதன் ஒரு பகுதியாக கல்விக்கடன் முகாம்களை தொடர்ந்து நடத்திடவும் அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் பல கட்டங்களாக கல்விக்கடன் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளில் மட்டும் 1420 மாணவ, மாணவிகளுக்கு ரூ.52.31கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாது இன்றைய முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட வங்கிகள் உரிய பரிசீலனை செய்து மாணவர்களின் உயர்கல்விக்கு வழிவகுக்கும் வகையில் கடனுதவிகளை வழங்கிட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, இம்முகாமில் தேர்வு செய்யப்பட்ட 36 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2.74 கோடி மதிப்பீட்டில் கல்வி கடனுக்கான ஆணைகளை போக்குவரத்துத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, வருவாய் கோட்டாட்சியர் அனிதா, அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாநகராட்சி மகர் நோம்புச் சாவடி பிளேக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் துவக்கி வைத்து பார்வையிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி , சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் , மேயர் சண்.இராமநாதன் , துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, வருவாய் கோட்டாட்சியர்நித்யா மாநகராட்சி ஆணையர் க.கண்ணன், மாநகர நல அலுவலர் மரு.நமச்சிவாயம் மற்றும் பலர் உடன் உள்ளனர்

# கும்பகோணத்தில் தஞ்சாவூர் வடக்கு மாவட்ட திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு விளக்க பொதுக்கூட்டம்



**கும்பகோணம்,செப்.22-**

கும்பகோணம் காந்தியடிகள் சாலையில் தஞ்சாவூர் வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு விளக்க பொதுக்கூட்டம் மாவட்ட பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான சாக்கோட்டை அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையிலும், மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன் வரவேற்பிலும் நடைபெற்ற இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பொன்முடி பங்கேற்று சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது,

தமிழ்நாட்டை தலைகுனிய வைப்பதற்கு அதிமுக செய்யும் நடவடிக்கை எல்லாம் கொஞ்ச நஞ்சமல்ல. சமீபத்தில் அதிமுக 5 கட்சிகளாகவே போய்விட்டது. இதனை அதிமுக என்று சொல்லவே கூடாது என டிடிவி தினகரனே சொல்கிறார். இது அதிமுக அல்ல எடப்பாடி பழனிச்சாமி திமுக என அவர் சொல்கிறார். டெல்லிக்கு சென்ற பழனிச்சாமி முக்காடு போட்டுக்கொண்டு வந்தார். இதற்கு தமிழ்நாட்டையே முக்காடு போட வைத்து விடுவேன் என்று நமக்கு அறிவிக்கிறார். இவர்களுக்கு தமிழ்நாட்டை ஓரணியில் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அவர்களது கட்சியையே ஒன்றாக நடத்த முடியவில்லை. அண்ணா காலத்திலேயே நிறைவேற்றப்பட்டது இரு மொழி கொள்கை. தமிழகம் என்றால் தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இரு மொழி கொள்கைதான். இது போதாதா. இன்னும் ஒரு மொழி எதற்கு?. கூடுதலாக பன்னாட்டு மொழியான ஆங்கிலம் இருந்தால் போதும். அதன் அடிப்படையிலேயே இரு மொழி கொள்கை கொண் டு வ ரப் பட் டது. இதனை ஒன்றிய அரசு கல்விக் கொள்கை என்று சொல்லி இந்தியை படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி திணிக்கின்றனர். நாங்கள் என்ன சொன்னாலும் மும்மொழி கொள்கையில் இந்தியை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தமிழக முதலமைச்சர் சொன்னதற்காக கல்விக்கு ஒன்றிய அரசு வழங்கிய நிதியை நிறுத்திவிட்டது. இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம். புதிய கல்விக் கொள்கை என்ற ஒன்றை அறிவித்து எது எது தேவையில்லையோ அத்தனையையும் ஒன்றிய அரசு புகுத்துகின்றது. அதன் அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு நீட் தேர்வை நடத்துகிறது. இதனை தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்திய அளவில் நடத்துகின்றனர். இதில் வட மாநிலத்தவர்கள் ஃபிராடு செய்து தேர்வாகி வந்து விடுகின்றனர். தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால்தான் நீட் தேர்வு கூடாது என துணை முதலமைச்சர் உதயநிதி கையெழுத்து இயக்கம் நடத்தி டெல்லிக்கு அனுப்பி வைத்தார். தொகுதி மறுவரையின் மூலம் சட்டமன்ற, பாராளுமன்ற தொகுதிகளை குறைக்க முயலும் ஒன்றிய அரசை விடமாட்டோம் என்று சூளுரைப்பது தான் முதலமைச்சரின் நோக்கம். இப்போது பாஜகவின் காலில் விழுந்து விட்டார் எடப்பாடி பழனிச்சாமி. அடிமையாக செயல்பட்டு கொண்டிருக்கிறார். சசிகலாவின் காலில் விழுந்து முதலமைச்சர் ஆனவர் தான் எடப்பாடி பழனிச்சாமி. சசிகலாவின் காலையே வாரிவிட்ட பழனிச்சாமிக்கு ஒரு நன்றி உணர்வு இருக்கிறதா?, தமிழ்நாட்டில் ஒரு கோடியே 18 லட்சம் தாய்மார்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்பது சாதாரண விஷயம் அல்ல. அரசு பள்ளியில் படித்து கல்லூரியில் சேர்கின்றவர்களுக்கு ஆயிரம் ரூபாய் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாணவிகளுக்கும், தமிழ் புதல்வன் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கும் கஷ்டப்படக்கூடாது என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார் என்றால் அதுதான் திராவிட மாடல் ஆட்சி என்று பேசினார்.

இதையடுத்து தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் குட்டி. தெட்சிணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் கோவி. அய்யாராசு, மாவட்ட அவைத் தலைவர் நசீர்முகமது, ஒன்றிய செயலாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடைபெறும் இடம்

## கலெக்டர் மு.அருணா தகவல்

**புதுக்கோட்டை,செப்.22-**

புதுக்கோட்டை மாவட்டத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்கள் 15.07.2025 முதல் 21.10.2025 வரை நடைபெறுகிறது. "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

இம்முகாம் 23.09.2025 அன்று கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

புதுக்கோட்டை மாநகராட்சி - 40, 42 வது வார்டு பகுதி பொதுமக்களுக்கு புதுக்கோட்டை, மர்லின் மஹாலிலும். அரிமளம் - 10 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு ஏம்பல் ஊராட்சி, வெள்ளாளஞ் செட்டியார் திருமண மண்டபத்திலும், அறந்தாங்கி –13 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு அறந்தாங்கி, மேற்பனைக்காடு ஊராட்சி, மேற்பனைக்காடு கிழக்கு, மேற்பனைக்காடு சமுதாயக் கூடத்திலும்,

அன்னவாசல் –10 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு கோத்திராப்பட்டி, மலைக்குடிப்பட்டி சமுதாயக் கூடத்திலும், திருவரங்குளம் -14 ஊராட்சி ஒன்றிய பகுதி குலமங்களம் தெற்கு ஊராட்சி, தமிழ் திருமண மண்டபத்திலும், விராலிமலை ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு பூதக்குடி, இராசநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்திலும் நடைபெற உள்ளது.

மேற்கண்ட முகாம்களில் பொதுமக்கள் தங்களது விண்ணப்பங்களை அளித்து பயன் பெறலாம். மேற்கண்ட தகவலை கலெக்டர் மு.அருணா, தெரிவித்துள்ளார்.

# திருவாரூரில் பெண்களுக்கான தைரியத்தையும், தன்னம்பிக்கையும் வெளிப்படுத்தும் விதமான இருசக்கர விழிப்புணர்வு பேரணி



**திருவாரூர்,செப்.22-**

திருவாரூர் பஜனைமட தெருவில் வசித்து வருபவர் திமுக மாநில விவசாயணி துணை செயலாளரும்,நகர மன்ற உறுப்பினருமானவர் இரா.சங்கர்.இவரது மனைவி ராஜாத் தி, இ வர் க ளுக்கு கௌசல்யா,கீர்த்தனா என இரண்டு மகள்கள் உள்ளனர் கள்.இதில் கீர்த்தனா உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராக உள்ளார்.மேலும் பெண்களுக்கான தைரியத்தையும்,தன்னம்பிக்கையும் வெளிப்படுத்தும் விதமான விழிப்புணர்வினை ஏற்படுத்த கீர்த்தனா தொடர்ந்து தனது கணவர் உடன் லட்சியமாகவும் கொண்டுள்ளார்.அந்த வகையில் கடந்த 2023ம் ஆண்டு பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த திருவாரூரிலிருந்து இரு சக்கர வாகனத்தில் பயணம் தொடங்கி 38 மாவட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தி அப்துல்கலாம் உலக சாதனை பெண்மணி என்ற பாராட்டு சான்று பெற்றுள்ளார்.இத னைத் தொ டர்ந்து நேற்று முன்தினம் (20ந்தேதி) உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கீர்த்தனா,தனது கல்லூரி நண்பர் வழக்கறிஞர் பிரசன்னாவுடன்

இரு சக்கர வாகனத்தில் பெண்கள் முன்னேற்றம், பெண்கள் பாதுகாப்பு,பெண்கள் தன்னம்பிக்கையாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி இருசக்கர வாகன விழிப்புணர்வு பயணத்தை திருவாரூரில் இருந்து ஜம்மு காஷ்மீர் அருகே யூனியன் பிரதேசமான லடாக் வரை சென்று நிறைவு செய்யஉள்ளனர்.இதன்படி திருவாரூரில் இருந்து வீராங்கனை வழக்கறிஞர் கீர்த்தனா லடாக் வரை பெண்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தி செல்லும் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கருண்கரட் கொடியசைத்து துவக்கிவைத்தார்.இந்நிகழ்வில் மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் மணி கண் டன், ந கர் மன்ற தலைவர் புவனபிரியாசெந்தில்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் இப்பால்,பெற்றோர்கள் இரா.சங்கர், ராஜாத்தி,சகோதரி கௌசல்யா, குடும்பத்தினர் மற்றும் தெருவாசிகள் வழி அனுப்பி வைத்தனர்.

# மயிலாடுதுறையில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் பேரணி மற்றும் பொதுக்கூட்டம்

**மயிலாடுதுறை,செப்.22-**

மயிலாடுதுறை யில்நடைபெற்ற பொதுகூட்டத்தில் கடந்த காலங்களில் விஜய்யைவிட வடிவேலுவிற்கு அதிக அளவில் கூட்டம் கூடியிருக்கிறது வடிவேலுவால் வெற்றிபெறமுடியவில்லை என்று விஜய் மக்கள் சந்திப்பு பயணம் குறித்து மமக தலைவர் ஜவாஹிருல்லா விமர்சனம்:-

மயிலாடுதுறையில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் முஸ்லிம்களுக்கு அரசியல் பிரதிநித்துவம் அளிக்க வேண்டும், வக்ப் திருத்த சட்டத்தை ரத்து செய்யக்கோரி பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மமக தலைவர் ஜவாஹிருல்லா செய்தியாளர்களிடம் கூறுகையில்

உள்ளாட்சி முதல் நாடாளுமன்றம் வரை சிறுபான்மை முஸ்லீம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும், வக்ஃபு திருத்த சட்டம் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி மதுரையில் ஜூலை 6ம் தேதி மாபெரும் பேரணி, மாநாடு நடத்தினோம். தொடர்ந்து பல்வேறு ஊர்களில் பேரணி, பொதுக்கூட்டம் நடத்திவருகிறோம். அதன்படி மயிலாடுதுறையில் தற்போது நடத்துகிறோம். வக்ஃபு திருத்த சட்டத்தில் உச்சநீதிமன்றம் சில நாட்களுக்கு முன்பு வழங்கிய தீர்ப்பு பாரபட்சமாக அமைந்துள்ளது. மனிதநேய மக்கள் கட்சி உட்பட திமுக, காங். உட்பட பல்வேறு கட்சிகள் அந்த வழக்கில் இணைந்திருந்தார்கள். இந்த வழக்கில் முஸ்லீம் அல்லாதவர்கள் வக்ஃபில் இடம்பெறலாம் என்று உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது. இந்து அறநிலையத்துறை அறக்கட்டளை, சீக்கிய குருது வாரா நிர்வாகத்தில் அந்த மதத்தை சாராதவர்கள் இடம் பெற முடியாது. வக்ஃபு என்பது முஸ்லீம், தனவந்தர்கள், முன்னோர்கள் கொடுத்த நன்கொடை. அதில் முஸ்லீம் அல்லாதவர்கள் இடம்பெறலாம் என்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பாரபட்சமானது. முஸ்லீம்கள் வக்.பு கொடுக்கலாம் 5 ஆண்டுகள் இஸ்லாத்தை கடைபிடித்தவர்கள் வக்பில் இடம்பெறலாம் என்று திருத்த சட்டம் சொல்கிறது. அதை எதிர்த்துதான் வழக்குதொடர்ந்துள்ளோம். யார் முஸ்லீம் என்பதை வரையறை செய்யும் சட்டத்தை மாநில அரசுகள் இயற்றும் வரை இதை அனுமதிக்கிறோம் என்று உச்சநீதிமன்றத்தில் சொல்கிறார்கள். முஸ்லீம்கள் யார் என்பதை வரையரை செய்யம் பொறுப்பை மாநில அரசுக்கு உரிமை வழங்கியிருப்பது அபத்தமானது. பல்வேறு மாநிலங்களில் பாஜ உள்ளிட்ட கட்சிகள் ஆட்சியில் இருக்கக்கூடிய கட்சிகள் அவர்களுக்கு விரும்பபக்கூடியவர்களை முஸ்லீம்கள் என்று வகைப்படுத்தப்பட்டு மட்டுமே வக்ஃபு செய்யும் நிலையை உருவாக்கும். இந்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வழக்குதொடர்ந்துள்ளோம். நவம்பர் மாதம் இறுதி விசாரணை நடக்கும் போது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு நல்ல தீர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கின்றோம். இந்திய தேர்தல் ஆணையம் பதிவு செய்யப்பட்ட 400 கட்சிகளின் பதிவை ரத்து செய்துள்ளது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 29ஏ பிரிவு, அரசியல் அமைப்பு சட்டம் 324 பிரிவை சொல்லுகிறார்கள். 29ஏயில் எங்கேயும் பதிவு செய்யப்பட்ட ஒருகட்சியை பதிவை நீக்கலாம் என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. 2000ம் ஆண்டு காங்கிரஸ். கட்சி தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தவறுதலாக மோசடித்தனமாக தவறான தகவல்களை கொடுத்து ஒரு கட்சி பதிவு செய்யப்பட்டால் அந்த பதிவை ரத்து செய்யலாம் என்று கூறியுள்ளது. தேர்தல் ஆணையத்திற்கு பதிவு செய்யப்பட்ட கட்சிகளை ரத்து செய்யக்கூடிய உரிமையை கொடுக்கவில்லை. ஜனநாயக உரிமையை பறிக்கக்கூடியதாக உள்ளது. மமக 2009 முதல் பதிவு செய்யப்பட்டு பல்வேறு தேர்தல்களில் சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களில் சொந்த சின்னத்தில் போட்டியிட்டு பேரூராட்சி, ஊராட்சி, மாநாகராட்சி தலைவர் உறுப்பினர்களாக பலர் இருந்துள்ளனர். தேர்தல் ஆணையம் பற்றி எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தி சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்ததில் உள்ள அபத்தங்களை தேர்தல் ஆணையம் செய்யும் முறை கேடுகளை அம்பலப்படுத்துகிறார். அதனை திசைதிருப்புவதற்காக பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்துள்ளது. 30 நாள் மேல்முறையீடு செய்ய காலஅவகாசம் கொடுத்துள்ளது. நிச்சயம் மேல்முறையீடு செய்து வெள்வோம். தவெக தலைவர் விஜயை காண்பதற்கு அதிக அளவில் கூட்டம் வந்திருக்கிறது. கடந்த காலங்களில் நடிகர் வடிவேலுக்கு அதிக கூட்டம் வந்தது அவரால் வெற்றிபெற முடியவில்லை. உடன் பொதுச்செயலாளர் அப்துல்சமது, மாநில அமைப்பு செயலாளர் அமின், மாவட்ட தலைவர் முகமது ஹாலிது உட்பட திரளானோர் இருந்தனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# திட்டச்சேரியில் வணிகர் சங்க நிர்வாகிகள் தேர்வு

**நாகப்பட்டினம்,செப்.22-**

திட்டச்சேரியில் வணிகர் சங்க நிர்வாகிகள் தேர்வு சனிக்கிழமை நடைபெற்றது.

நாகை மாவட்டம் திட்டச்சேரியில் வணிகர் சங்க கூட்டம் சின்ன பள்ளிவாசலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 100 -க்கும் மேற்பட்ட வணிகர்கள் ஒன்று சேர்ந்து புதிய நிர்வாகிகளை தேர்வு செய்தனர். இதில் சங்கத்தின் தலைவராக எம்.முகமது சாதிக் துணைத் தலைவராக ஆர்.பிரகாஷ் செயலாளராக டி.ஏ.அப்துல் பாசித் துணை செயலாளராக டி.பத்மநாபன் பொருளாளராக ஏ.அப்துல்ரகுமான் மற்றும் 18-செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது, தொடர்ந்து கூட்டத்தில் மாதா மாதம் கூட்டத்தை நடத்துவது, மாத சந்தா வசூல் செய்வது, கூட்டத்தில் வர்த்தக சங்கத்துக்கு நல வாரியம் அமைத்து காப்பீடு செய்ய வேண்டும் வர்த்தகர்கள் 100 - சதவீதம் புகையிலை மற்றும் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

# பூம்புகாரில் தூய்மைபணி

**மயிலாடுதுறை,செப்.22-.**

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் கடற்கரையில் உலக தூய்மை தினத்தை முன்னிட்டு கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் தேங்கி இருந்த குப்பைகள் சனிக்கிழமை அகற்றப்பட்டனர். பூம்புகார் சுற்றுலா தலமருகே நீண்ட கடற்கரை உள்ளது இங்கு தேங்கியுள்ள குப்பைகளை அகற்றி கலெக்டர் ஹெச். எஸ். ஸ்ரீகாந்த் அறிவுறுத்தினார்.

அவரது அறிவுறுத்தல் பேரில் ஹேண்ட இன் ஹேண்ட் இந்தியா என்கிற அரசு சாரா அமைப்பு, ஊராட்சி நிர்வாகம் மற்றும் சுற்றுலாத் துறை சாரபில் குப்பைகளை அகற்றும் பணி நடந்து.அமைப்பின் திட்ட அலுவலர் தலைமை தாங்கினார்.இந்தப் பணிகளை மாவட்ட சுற்றுலாத் துறை துணை அதிகாரி பாலமுரளி தூய்மைப்படுத்தும் பணியைகொடியசைத்து தொடங்கி வைத்தார் , முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர். சசிக்குமார் கிராம மீனவ பஞ்சாயத்தார்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த பணியில் சுமார் 60 க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டு கடற்கரையில் தேங்கி இருந்த 800 கிலோ அளவிலான குப்பைகளை அகற்றி னர்.

# கருணை அடிப்படையில் சம்பள உயர்வு அடையாள அட்டை வழங்க கோரிக்கை

**திருத்துறைப்பூண்டி,செப்.22-**

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் மதுரை கோட்டம், திருநெல்வேலி கோட்டம், கோவை கோட்டங்களில் டிக்கெட் கேன்வாசர், தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் தெரிவித்திருப்பதாவது: கருணை அடிப்படையில் சம்பள உயர்வு அடையாள அட்டை வேண்டி அனுப்பியுள்ளனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் மதுரை கோட்டம், திருநெல்வேலி கோட்டம், கோவை கோட்டங்களில் டிக்கெட் கேன்வாசர் என்ற பெயரிலும் கும்பகோணம் கோட்டத்தில் கூவி அழைப்பவர் என்ற பெயரிலும் சேலம் கோட்டம், விழுப்புரம் கோட்டங்களில் தரகர் என்ற பெயரிலும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக பேருந்து நிலையங்களில் மேற்குறிய தொழிலாளர்கள் சுமார் 1500 பேர் பணி புரிந்து வருகின்றனர். இவர்கள் எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்றனர். மேற்குறிய வறுமை தொழிலாளர்கள் 2001-ம் ஆண்டு வரை மாத சம்பளம் திருநெல்வேலி, மதுரை SETC ஆகிய கோட்டங்களில் ரூ.900/- பெற்று வந்துள்ளனர். இவர்கள் பயணிகளை கூவி அழைத்து பேருந்துகளில் ஏற்றும் பணி டைம் கீப்பர் மற்றும் பேருந்துகள் சரியான நேரத்திற்கு அனுப்பும் பணியையும் பார்த்து வருகின்றனர். சம்பளம் கூட நடத்துனர்களிடம் இருந்து தான் பெறுகின்றனர். வேலை பார்ப்பதற்கு ஒரு அடையாள அட்டை கூட கிடையாது. சம்பளம் பேருந்து நடை ஒன்றிற்கு ரூ.1.25 தான் பெறுகின்றனர். இதை வைத்து குடும்பம் நடத்த கூட முடியாது. எனவே

தொழிலாளர் நலன் கருதி கருணை அடிப்படையில் பேருந்து நடை ஒன்றிற்கு ரூ.5 வீதமும், அனைத்து போக்குவரத்து கழக ஆறு கோட்டங்களில் பல்வேறு பெயர்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு டிக்கெட் கேன்வாசர் என்ற பெயரில் ஆந்திரபிரதேஸ் ரோடு டிரான்ஸ்போட் கார்ப்ரேசனில் கொடுத்தது போன்று அடையாள அட்டையும் (மூன்று மாதத்திற்கு ஒரு தடவை புதுப்பிக்கும் அடையாள அட்டை) கிடைத்திட ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

# மயிலாடுதுறையில் மகாளய அமாவசை முன்னிட்டு பித்துருகளுக்கு திதி வழங்கி அன்னதானம்



**மயிலாடுதுறை,செப்.22-**

மயிலாடுதுறை துலாகட்டகாவிரியில் மகாலய அம்மாவாசை முன்னிட்டு ஆயிரகணக்கானோர் முன்னோருக்கு தமர்பனம் செய்தனர் இதன் தொடர்ச்சியாக ஸ்ரீ லஸ்ரீ பாய்கட்டி சுவாமிகள் அறகட்டளை சார்பாக அரசு பெரியார் மருத்துவமனையில் தலைவர் ராஜரெத்தினம் தலைமையில் அன்னதானம் நோயாளிகளுக்கும், உதவியாளர்களுக்கும் வெரைடி ரைஸ் அன்னதானம் வழங்கினர் முன்னிலையாக சமுக ஆர்வலர் அப்பர்சுந்தரம், செயலர்டிஜி. ராஜரத்தினம. பொருளர் பழனிசாமி, துணைதலைவர் பத்மாவதி கலந்து கொண்டனர் இதில் 300க்கும் மேற்பட்டவர் பயன்பெற்றனர்

# திட்டச்சேரி பேரூராட்சி பகுதி சாலைகளில் கால்நடைகளை விடவேண்டாம்

## பேரூராட்சி செயல் அலுவலர் எச்சரிக்கை

**நாகப்பட்டினம்,செப்.22-**

நாகை மாவட்டம் திட்டச்சேரி பேரூராட்சியில் கால்நடைகளை தெருக்களில் விட வேண்டாம் பேரூராட்சி செயல் அலுவலர் பொன்னுசாமி தெரிவித்துள்ளார். திட்டச்சேரி பேரூராட்சி பகுதி சாலைகளில் ஆடு மாடுகள் பன்றிகள் உள்ளிட்ட கால்நடைகள் சுற்றித் திரிவதால் வாகன ஓட்டிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்துவதுடன் பல்வேறு விபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே பொது வெளியில் சுற்றி திரியும் கால்நடைகளை அதன் உரிமையாளர்கள் சாலைகளில் விடாமல் வீட்டிலேயே கட்டி பராமரிக்க வேண்டும் இல்லையே பேரூராட்சி நிர்வாகத்தால் பிடித்து அப்புறப்படுத்தப்பட்டு அதற்குண்டான செலவினத்தை கால்நடை உரிமையாளரிடம் இருந்து வசூல் செய்யப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பில்ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு பொதுக்கூட்டத்தில் அமைச்சர் சு.முத்துசாமி பேசினார். உடன் அந்தியூர் செல்வராஜ் எம்பி ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு.சுப்ரமணியம் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் துணைமேயர் விசெல்வராஜ் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் கருங்கல்பாளையம் பகுதி திமுக செயலாளர் குறிச்சி தண்டபாணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# அதிகரட்டி பேரூராட்சி பகுதிகளில் ரூ.3 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு

ஊட்டி, செப்.22-

நீலகிரி மாவட்டம் அதிகரட்டி பேரூராட்சி பகுதிகளில் ரூ.3 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



நீலகிரி மாவட்டம்; அதிகரட்டி பேரூராட்சி பகுதியில், 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டட பணியினையும், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.125.10 இலட்சம் மதிப்பில் குன்னூர் சாலை முதல் அதிகரட்டி சாலை வரை நடைபெற்று வரும் தடுப்புச்சுவருடன் கூடிய சிமெண்ட் சாலை பணியினையும், கோடேரி பகுதியில்; 2025-2026 கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.49.90 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் தடுப்புச் சுவருடன் கூடிய சிமெணட்; கான்கிரீட் சாலை பணியினையும், காட்டேரி பகுதியில் நூலக கட்டிட நிதியிலிருந்து ரூ.24.95 இலட்சம் மதிப்பில்; கட்டப்பட்டு வரும் நூலக கட்டிட பணியினையும், சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் கொல்லிமலை பழங்குடியினர் காலனியில், மேம்படுத்தப்பட்டு வரும்; சாலை மற்றும் தடுப்புச்சுவர் கட்டும் பணிகள்; என மொத்தம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து காட்டேரி பகுதியில் செயல்பட்டு வரும் நீலகிரி லிங்காயத்து ஆரம்பபள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம், மாணவ மாணவிகளின் கல்வி கற்றல் திறன், இருப்பு பதிவேடுகள், அப்பகுதியில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையம் மற்றும் காட்டேரி பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கணேசன், உதவி செயற்பொறியாளர் ராஜா, குன்னூர் வட்டாட்சியர் ஜவகர், அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலர் நடராஜ்;, அதிகரட்டி பேரூராட்சி தலைவர் பேபி, இளநிலை பொறியாளர் சுரேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.

# திருவாரூர் அருகே முத்துப்பேட்டையில் உலக கடற்கரை தூய்மை வாரத்தை முன்னிட்டு மெகா பனை விதைப்பு பணி



திருவாரூர்,செப்.22-

மன்னார்குடி கல்வி மாவட்ட பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் சார்பில் தேசிய தலைமையகத்தின் அறிவுறுத்துதலின் படியும் மாநில தலைமையகத்தின் வழிகாட்டுதலின் படியும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சௌந்தரராஜன்,மாவட்ட முதன்மை ஆணையரும் மாவட்ட இடைநிலை கல்வி அலுவலருமான ராஜேஸ்வரி, மாவட்ட தலைவரும் மாவட்ட தனியார் பள்ளிகள் கல்வி அலுவலருமான சாவித்திரி ஆகியோரின்ஆலோசனையுடனும் உலக கடற்கரை தூய்மை வாரத்தை முன்னிட்டு முத்துப்பேட்டை அருகே தில்லைவிளாகம் தெற்கு காடு கடற்கரை முகத்துவாரத்தில் தூய்மை பணியும் 3632 பனை விதைகள் நடும் பணியும் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு முத்துப்பேட்டை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்திகேயன் தலைமை வகித்தார்.சாரணர் இயக்க மாவட்ட பொருளாளர் சங்கர்,தேசிய பசுமை படை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நடனம்,பாலம் தொண்டு நிறுவன இயக்குனர் செந்தில்குமார், நூற்றாண்டு லயன்ஸ் சங்க தலைவர் மாதவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திரிசாரணர் படை தலைவர் ரமேஷ் குமார் வரவேற்றார்.மாவட்ட செயலாளர் சக்கரபாணி, திரி சாரணர் படை தலைவர் பழனிவேல், தில்லைவிளாகம் ஊராட்சி செயலாளர் முருகானந்தம், நூற்றாண்டு லயன்ஸ் சங்க செயலாளர் வீரமணி,பொருளாளர் மோகன், முன்னாள் தலைவர்கள் கார்த்திகேயன், தங்கமணி முன்னாள் பொருளாளர் நவீன், சுகாதார ஊக்குநர் உமாராணி எடமேலையூர், கோட்டூர், திருத்துறைப்பூண்டி, இடையூர் அரசு பள்ளிகளை சேர்ந்த திரி சாரணர்களும் மன்னார்குடி தேசிய மேல்நிலைப்பள்ளி திரி சாரணர்களுமாக மொத்தம் 70 பேர் கலந்து கொண்டார்கள். திரி சாரணர் படை தலைவர் ரமேஷ் நன்றி கூறினார்.

# தமிழகத்தில் உள்ள பனை மரங்களை வெட்டினால் அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட வேண்டும்

## பசுமை சூழல் பாதுகாப்பு இயக்க தலைமை ஒருங்கிணைப்பாளர் கோரிக்கை

திருவாரூர்,செப்.22-

தமிழர்களின் பண்பாட்டு அடையாளமான பனை மரங்களை வெட்ட மாவட்ட ஆட்சியரின் அனுமதி கட்டாயம் என அரசாணை வெளியிட்ட தமிழ அரசின் அரசாணையை வரவேற்பதோடு.நன்றியையும் பசுமை சூழல் பாதுகாப்பு இயக்கம் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.



கற்பக விருட்சம் என அழைக்கப்படும் தமிழகத்தின் மாநில மரம் என நாம் பெருமைப்படும் பனை மனிதனின் சாரசரி ஆயுட்காலத்தை விட அதிக நாள் உயிர் வாழக்கூடியது.நூறு ஆண்டுகள் கடந்தும் உயிர் வாழக்கூடிய பனை மரங்களை வெட்டிவிட்டு அதற்கு ஈடாக பத்து பனை விதைகளை நட வேண்டும் என்ற அரசின் அரசாணை ஏற்புடையதல்ல.பனை என்பது மனிதனின் பராமரிப்பின்றி வளரக்கூடிய தாவர இனங்களில் முதன்மையானது.எனவே தமிழக அரசு அனுமதியின்றி பனையை வெட்டுபவர்களுக்கு தண்டனையை கூடுதலாக்க வேண்டும்.

இலங்கை நாட்டில் பனையை வெட்டுபவர்களுக்கு கடுமை¬யான சிறை தண்டனை இருக்கும் வேளையில் தமிழின் வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்த பனை ஓலைகளை தந்த பனை மரங்களை வெட்டினால் அபராதமும்,சிறைத் தண்டனை போன்ற சட்டங்களை அமலாக்க வேண்டும் என பசுமை சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பருத்திச்சேரி.ராஜா திருத்துறைப்பூண்டியில் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். பனை மரம் பல்வேறு வகையிலும் தமிழர்களுக்கு உதவி கரமாக விளங்கி வருகிறது. ஆகையால் தமிழகத்தில் உள்ள பனை மரங்களை வெட்டினால் அதிகபட்ச தண்டனைகள் விதிக்கப்பட வேண்டுமென அரசாணை வெளியிட வேண்டும் என்று தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# நீலகிரி மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம்: ஆ.ராசா எம்.பி.தலைமையில் நடைபெற்றது





ஊட்டி, செப்.22-

நீலகிரி மாவட்டம், ஊட்டி தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா தலைமையில், அரசு கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் (20.09.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நீலகிரி, கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, தங்களது துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட திட்டங்கள் குறித்தும் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், தூய்மை இந்தியா திட்டம், பிரதான் மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், 15வது நிதிக்குழு மானியத்தின் கீழ் சுகாதார கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய திட்டங்களின் கீழ்; நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சம்மந்தப்பட்ட துறைச் சார்ந்த அலுவலர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பேரூராட்சிகள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், தோட்டக்கலைத்துறை, சமூக பாதுகாப்புத்திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்;, குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்;டங்கள் குறித்து அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:-

நீலகிரி மாவட்டத்தில், நடைபெற வேண்டிய மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கடந்த நிதியாண்டுகளாக தமிழக அரசாலும், ஒன்றிய அரசாலும் வழங்கப்பட்ட திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பணிகள் நடைபெற்று வருகிறது அதனையும் விரைந்து முடிக்க உரிய அறிவுரைகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மாவட்டத்தின் வளர்ச்சி பணிகள் திருப்திகரமாக உள்ளது. அதற்கு எனது பாராட்டுக்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன் தொடர்ந்து, நடைபெற்ற பொது விநியோக திட்டத்தின் காலாண்டு கூட்டத்தில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு, மின்னணு குடும்ப அட்டைகள் வாரியாக அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படும் விவரங்கள், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக கிடங்குகளின் கொள்ளளவு, அத்தியாவசிய பொருட்களின் இருப்பு உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், மாவட்ட வன அலுவலர்கள்; (கூடலூர்) வெங்கடேஷ் பிரபு , திரு.கௌதம் (நீலகிரி கோட்டம்), துணை இயக்குநர்கள் (முதுமலை புலிகள் காப்பகம்) வித்யாதர், கணேசன் , குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பவானி நகராட்சியில்

# உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



ஈரோடு,செப்.22-

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வு வழங்கும் வகையில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற சிறப்புத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இச்சிறப்பு திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 340 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களில் தீர்வு வழங்கப்பட்டு வருகிறது. நேற்று "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்டத்தின் கீழ்,பவானி நகராட்சியில் உள்ள தனியார் மண்டபத்தில் சிறப்பு முகாம் நடைபெற்றது முகாமைபவானிநகர்மன்ற தலைவர் சிந்தூரி இளங்கோவன் முகாமை தொடங்கி வைத்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் வருவாய்த்துறை அமைச்சரும் ஈரோடு மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளருமான தோப்பு வெங்கடாஜலம் கலந்துகொண்டு தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு தீர்வு ஆணைகளை வழங்கியும் பொதுமக்களிடம் குறைகளையும் கேட்டறிந்தார். இந்த முகாமில் 200க்கும் மேற்பட்ட மனுக்கள் வாங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில்நகராட்சி ஆணையாளர் பிரான்சிஸ்சேவியர்,

பவானி மின் கோட்ட பொறியாளர் ராமச்சந்திரன்,உதவி செயற்பொறியாளர்கள் யசோதா,முனிராஜ் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு நீலகிரி மாவட்ட ஓட்டல் மற்றும் உணவகம் சங்கத்தினர் சார்பில் ஊட்டி- பூங்கா சாலையில் அமைக்கப்பட்டிருந்த உணவு திருவிழாவை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்து அரங்குகளை பார்வையிட்டார். உடன் ஓட்டல் சங்க தலைவர் சுரேஷ்நாயர் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கதிரம்பட்டி ஊராட்சி, மாரியம்மன் கோயில் அருகில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.



மாகாளயா(புரட்டாசி) அமாவாசையான நேற்று ஊட்டியிலுள்ள ஸ்ரீ வேணுகோபால சுவாமிகோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பலர் கலந்து கொண்டு முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர்.

### பங்களாபுதூர் அருகே

# விவசாயியை யானை மிதித்து கொன்றதால் பரபரப்பு: இரவு நேர காவலில் இருந்தபோது பரிதாபம்

ஈரோடு,,செப். 22-

ஈரோடு மாவட்டம் டி.என்.பாளையம் அடுத்த கொங்கர் பாளையம், வினோபா நகரை சேர்ந்தவர் பெரியசாமி (34). விவசாயி. இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. பெரியசாமி அதே பகுதியில் அரை ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்திருந்தார்.தோட்டம் இருக்கும் பகுதி வனப்பகுதி ஒட்டி உள்ளதால் இரவு நேரங்களில் துரைசாமி தோட்டத்தில் காவலில் இருப்பது வழக்கம்.

நேற்று முன்தினம் இரவும் வழக்கம்போல் பெரியசாமி இரவு நேர காவலுக்காக தோட்டத்திற்கு சென்று விட்டார்.நள்ளிரவில் அவரது தோட் டத் தை யொட்டி காட்டு யானைகள் கூட்டம் வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த பெரியசாமி பக்கத்து தோட்டத்தை சேர்ந்தவர்களை ஒன்று திரட்டி யானைகளை மீண்டும் வனப் பகுதிக்குள் விரட்டும் முயற்சியில் ஈடுபட்டார்.

அப்போது யானை மிதித்ததில் பெரியசாமி சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக இறந்தார்.

நள்ளிரவு நேரம் என்பதால் பெரியசாமி இறந்தது உடனடியாக தெரியவில்லை. இந்நிலையில் நேற்று காலை பெரியசாமியின் தாய் மகனை பார்க்க தோட்டத்திற்கு சென்றார். அப்போது பெரியசாமி தோட்டத்தில் உடல் நசுங்கி நிலையில் இறந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து பங்களாபுதூர் போலீசார் மற்றும் வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பெரியசாமி உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். யானை மிதித்து விவசாயி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### பி.சி.சி.ஐ.-ன் புதிய தலைவராக

# பொறுப்பேற்கும் சி.எஸ்.கே. முன்னாள் வீரர் மிதுன் மனாஸ்?



மும்பை, செப். 22-

பி.சி.சி.ஐ.யின் புதிய தலைவராக சி.எஸ்.கே. அணியின் முன்னாள் வீரர் மிதுன் மனாஸ் நியமிக்கப்படுகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

**தேர்வு செய்யும் பணி...**

இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு வாரியத்தின் (பி.சி.சி.ஐ.) தலைவராக பதவி வகித்த ரோஜர் பின்னி 70 வயதான நிலையில் பதவி விலகினார். அதைத் தொடர்ந்து துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா பி.சி.சி.ஐ.யின் தற்காலிக தலைவராக பொறுப்பேற்றார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய தலைவரை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் தெண்டுல்கர் நியமிக்கப்படலாம் என்று முன்பு தகவல் வெளியாகி இருந்தது. பின்னர் அது வதந்தி என்று தெரிவிக்கப்பட்டது.

**ஆலோசனை கூட்டம்...**

இந்தநிலையில் பி.சி.சி.ஐ.யின் புதிய தலைவராக சி.எஸ்.கே. அணியின் முன்னாள் வீரர் மிதுன் மனாஸ் நியமிக்கப்படுகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு வாரியத்தின் மூத்த நிர்வாகிகள் மற்றும் முக்கிய முடிவுகளை எடுப்பவர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், காலியாக உள்ள பதவிகளுக்கான வேட்பாளர்களை இறுதி செய்வது குறித்து விவாதம் நடைபெற்றது. மிதுன் மனாஸ் மற்றும் கர்நாடக கிரிக்கெட் சங்கத் தலைவர் ரகுராம் பட் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

**புதிய தேர்வு குழு...**

இந்த கூட்டத்திற்குப் பிறகு தலைவர் பதவிக்கு மிதுன் மனாஸ் பெயரே கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டுவிட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. பி.சி.சி.ஐ.யின் வருடாந்திர பொதுக்குழு கூட்டம் வருகிற 28-ம் தேதி டெல்லியில் நடக்கிறது. இந்த கூட்டத்தில் பி.சி. சி.ஐ.யின் தலைவராக மிதுன் மனாஸ் இறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்படுகிறார். இதே போல புதிய தேர்வு குழு உறுப்பினர்கள் உள்பட பல்வேறு நியமனங்களும் இந்த கூட்டத்தில் அறிவிக்கப்படும். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்க இருக்கும் மிதுன் மனாஸ் இந்திய அணிக்காக ஒரு போட்டியில் கூட ஆடியது கிடையாது.

**ஓய்வு பெற்ற பிறகு...**

157 முதல் தர போட்டியில் விளையாடி 9714 ரன் எடுத்துள்ளார். இதில் 27 சதம் அடங்கும். டெல்லி அணியின் முன்னாள் கேப்டனான மிதுன் மனாஸ் ஐ.பி.எல். போட்டி யில் சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், புனே வாரியர்ஸ் அணிக்காக ஆடி இருக்கிறார். ஓய்வு பெற்ற பிறகு ஜம்மு-காஷ்மீர் கிரிக்கெட் சங்கத்தின் செயல்பாடுகளின் இயக்குநராகவும் பணியாற்றி, நிர்வாக அனுபவத்தை பெற்றுள்ளார். இந்த அனுபவமே அவரை பி.சி.சி.ஐ. தலைவர் பதவிக்குக் கொண்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

### தி.மு.க. - த.வெ.க. இடையேதான் போட்டியா?

# விஜய் பேச்சுக்கு இ.பி.எஸ். பதில்



சென்னை, செப். 22-

த.வெ.க. தலைவர் விஜய், தி.மு.க.வுக்கும் - த.வெ.க.வுக்கும் இடையேதான் போட்டி என பேசியது குறித்து செய்தியாளர்கள் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு, “அது அவருடைய கருத்து. ஆனால் மக்கள் கருத்து வேறு” என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கடந்த செப்டம்பர் 5-ம் தேதி செய்தியாளர்களைச் சந்தித்து, “அ.தி.மு.க. ஒன்றிணைய, பிரிந்தவர்கள் ஒன்று சேர வேண்டும். அப்போதுதான் வெற்றிபெற முடியும். 10 நாள்களுக்குள் இது நடக்கவில்லை என்றால் தேர்தல் சுற்றுப்பயணத்தில் பங்கேற்க மாட்டேன்” என்று தெரிவித்தார். அடுத்த நாளே கட்சியின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவரை நீக்கினார்.

இதையடுத்து சலசலப்புகள் நிலவி வந்த சூழலில் டெல்லி சென்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து விட்டுத் திரும்பினார் செங்கோட்டையன். அதைத்தொடர்ந்து, எடப்பாடி பழனிசாமியும் டெல்லிக்குச் சென்று அமித் ஷாவை சந்தித்து விட்டுத் திரும்பினார். இந்தச் சந்திப்பின் போது அ.தி.மு.க. உட்கட்சி விவகாரம் தொடர்பாக பேசப்பட்டிருக்கலாம் எனத் தகவல் வெளியானது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சேலத்தில் பிரதமர் மோடியின் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற மினி மாரத்தானை தொடங்கிவைத்தார் தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார். இதையடுத்து சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை அவரது இல்லத்தில் சந்தித்தார் நயினார் நாகேந்திரன்.

இந்நிலையில் த.வெ.க. தலைவர் விஜய், தி.மு.க.வுக்கும் - த.வெ.க.வுக்கும் இடையேதான் போட்டி என பேசியது குறித்த கேள்விக்கு, “அது அவருடைய கருத்து. ஆனால் மக்கள் கருத்து வேறு” என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அடுத்தாண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தமிழக வெற்றிக் கழகம் என்ற புதிய கட்சியைத் தொடங்கிய நடிகர் விஜய், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். கடந்த வாரம் திருச்சியில் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கிய விஜய், நேற்று நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மக்களைச் சந்தித்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

தி.மு.க.வை தனது அரசியல் எதிரி என்றும், பா.ஜ.க.-வை தனது கொள்கை எதிரி என்றும் கூறி வரும் நடிகர் விஜய் தனது முதல் அரசியல் மாநாடு முதல் தற்போதைய தேர்தல் பரப்புரையிலும் செல்லும் இடமெல்லாம் வரும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. - த.வெ.க.விற்கும்தான் போட்டி என்று மீண்டும் மீண்டும் பதிவு செய்து வருகிறார். வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கும் த.வெ.க.வுக்கும் இடையே தான் நேரடிப் போட்டி எனத் தெரிவித்த நிலையில், எடப்பாடி பழனிசாமி, மக்களின் கருத்து வேறு எனக் கூறியுள்ளார்.

### இன்று முதல் அமலாகும்

# புதிய ஜி.எஸ்.டி. வரியால் விலை குறையும் பொருட்களின் விவரம்

### மக்கள் புகார் அளிக்க உதவி எண்கள் அறிவிப்பு

சென்னை, செப். 22-

இன்று முதல் அமலாகும் புதிய ஜி.எஸ்.டி. வரியால் விலை குறையும் பொருட்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. ஜி.எஸ்.டி. குறைக்கப்படாமல் பொருட்கள் விற்கப்பட்டால் மக்கள் புகார் அளிக்க இணையதள முகவரி மற்றும் உதவி எண்களை மத்திய அரசு அறிவித்துள்ளது.

வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் சுமையை குறைக்கும் வகையில், நான்கு அடுக்குகளாக இருந்த ஜி.எஸ்.டி. எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி, இரண்டு அடுக்குகளாக எளிமைப்படுத்தப்பட்டது. இதன்படி 5, 12, 18 மற்றும் 28 சதவீதம் என நான்கு அடுக்குகளாக இருந்த ஜி.எஸ்.டி., 5 மற்றும் 18 என இரு அடுக்குகளாக மாற்றப்பட்டது.

முன்னதாக இந்தியர்களின் சேமிப்பு விதம் தொடர்ந்து குறைந்து, கடன் சுமை அதிகரித்து வருவதாக புள்ளிவிவரங்கள் தெரிவித்தன. எனவே இதனை சமநிலைப்படுத்தும் நோக்கத்தில் மத்திய அரசு இந்தாண்டு பட்ஜெட்டில் ரூ.12 லட்சம் வரையிலான வருமானத்திற்கு வருமான வரி தள்ளுபடியை அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக தற்போது, ஜி.எஸ்.டி. வரியிலும் பெரிய சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி தற்போது 5 மற்றும் 18 என்ற 2 வரி விகிதங்களாக எளிமைப்படுத்தப்பட்டு உள்ளன. அதனால் 12 சதவீதத்தில் இருந்த 99 சதவீத பொருட்கள் 5 சதவீத வரிக்கும், 28 சதவீதத்தில் உள்ள 90 சதவீத பொருட்கள் 18 சதவீதத்திற்கும் வருகின்றன. இந்நிலையில் இந்த புதிய விகிதம் நாளை முதல் அமலுக்கு வர உள்ளதால், அன்றிலிருந்து மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்கள், மின்சாதனங்கள், வாகனங்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் குறைய உள்ளன.

**அத்தியாவசிய உணவுப் பொருட்கள்**

- 18 சதவீதம் இருந்த ரெடிமேட் பரோட்டா, 5 சதவீதத்தில் இருந்த சப்பாத்திக்கும் வரி முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. அதனால் அதன் விலை ஒன்றுக்கு 50 பைசா முதல் ரூ.5 வரை குறைகிறது.
- சாக்லெட்டுகள், பாஸ்தா, ரெடிமேட் நூடுல்ஸ் ஆகியவை 5 சதவீதத்திற்கு வந்துள்ளதால் அதன் விலையும் கணிசமாக குறைகிறது.
- பன்னீருக்கு இருந்த 5 சதவீத வரி முற்றிலும் நீக்கப்பட்டுள்ளதால், ஒரு கிலோ பன்னீர் விலை ரூ.300 ஆக இருந்தால் ரூ.15 குறைந்துவிடுகிறது. அதே போல் நெய், வெண்ணெய் போன்ற பொருட்களுக்கு இருந்த 12 சதவீத வரி 5 ஆக குறைக்கப்பட்டு உள்ளதால், அதன் விலையும் குறைகிறது. உதாரணமாக ஒரு கிலோ நெய்-வெண்ணெய் ரூ.600 விற்பனை செய்யப்பட்டால் ரூ.40 குறைந்து ரூ.560 ஆகிறது.
- உலர் பழங்கள், நொறுக்குத்தீனி மீதான ஜி.எஸ்.டி. 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதத்திற்கு வந்து விட்டதால் விலை குறைக்கப்பட்டு உள்ளது. மக்களின் வீட்டு உபயோக பொருட்களான ஏ.சி., பிரிட்ஜ், வாஷிங் மெஷின், ‘32 இன்ச்’-க்கு மேல் உள்ள டி.வி.க்கள், ‘டிஷ் வாஷர்’ ஆகியவை 28 சதவீதத்தில் இருந்து 18 சதவீத வரிக்குள் வந்து விட்டது. இதனால் இந்த பொருட்களின் சராசரி விலையில் இருந்து 10 சதவீதம் குறைகிறது. உதாரணமாக ரூ.40 ஆயிரம் விற்ற ஏ.சி., இப்போது ரூ.4 ஆயிரம் குறைந்து ரூ.36 ஆயிரம் ஆகி இருக்கிறது.

**குறையும் கார்கள் விலை**

- ஆடம்பர கார்களை தவிர 1,200 சி.சி.க்கும் குறைவாக உள்ள கார்கள் அனைத்தும் விலை குறைக்கப்பட்டு உள்ளது. அதன் வரி 28 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டு உள்ளதால் அதன் விலைக்கு ஏற்ப விலை குறைவு இருக்கிறது. அதாவது ரூ.65 ஆயிரம் முதல் ரூ.3½ லட்சம் வரை கார் விலை குறைகிறது.
- 350 சி.சி.க்கு உட்பட்ட மோட்டார் சைக்கிள் வரி 28-ல் இருந்து 18 ஆக குறைந்து விட்டது. அதனால் அதன் விலை ரூ.10 ஆயிரத்தில் இருந்து ரூ.35 ஆயிரம் வரை குறைக்கப்பட்டுள்ளது. மின்சார வாகனங்களுக்கு ஏற்கனவே இருந்த 5 சதவீத வரி தற்போதும் தொடர்வதால் அதில் எந்த மாற்றமும் இல்லை.
- மருத்துவ உபகரணங்கள், தெர்மாமீட்டர்கள், நோய் கண்டறியும் கருவிகள், ரத்த சர்க்கரை கண்டறியும் கருவிகள், சில மருந்துகள், மாத்திரைகள் ஆகியவை 18 மற்றும் 28 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதால் அதன் விலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது.
- மக்கள் பயன்படுத்தும் மூக்கு கண்ணாடிகள், லென்சுகள் ஆகியவை 28 சதவீதத்தில் இருந்து 5 சதவீதத்திற்கு வந்துள்ளதால் பெரிய விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ரூ.1,000 ஆக இருந்தால் இப்போது அதன் விலை சராசரியாக 25 சதவீதம் அளவுக்கு குறைந்து ரூ.750 ஆகி உள்ளது.

**பூஜ்ஜிய வரி**

- மாணவர்கள் பயன்படுத்தும் பென்சில், ரப்பர்கள், மேப்-புகள் ஆகியவை பூஜ்ஜிய வரிக்கு வந்து விட்டதால் அதன் விலை குறைந்துள்ளது.
- இது தவிர சோப்புகள், டூத் பேஸ்ட், ஷாம்புகள், தலைக்கு தேய்க்கும் எண்ணெய்கள் 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக மாறி இருப்பதால் குறைந்தது ரூ.6.50-ல் இருந்து ரூ.40 வரை விலை குறைந்துள்ளது. சராசரியாக 10 சதவீதம் வரை பொருட்களுக்கு ஏற்ற விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது.
- துணிமணிகள் ஏற்கனவே இருக்கும் 5 சதவீத வரியில் மாற்றம் இல்லையென்றாலும் ரூ.2,500 மேல் இருக்கும் ஆடைகள் 12 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. அதே போல் குல்ட் மெத்தைகள் போன்றவையும் வரி உயர்ந்து உள்ளதால் அதன் விலைகள் அதிகரித்துள்ளது.
- வீட்டு உபயோகத்திற்கு பெரிதும் தேவையான சமையல் மற்றும் சாப்பாட்டு பாத்திரங்கள் பானைகள், குக்கர், தட்டுகள், கரண்டிகள், வாணலி, டவா, அடுப்பு, கிண்ணங்கள், கண்ணாடிகள், கத்தி, மேசை கரண்டி, ஸ்பூன் வகைகள் ஆகியவற்றில் பெரும்பாலும் 12, 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதத்திற்கு வந்து விட்டதால் விலை குறைந்து உள்ளது.

கட்டுமான பொருட்கள்

- சைக்கிள்கள் 12, 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதத்திற்கு வந்து விட்டதால், சராசரியாக ஒரு சைக்கிளுக்கு விலைக்கு ஏற்ப ரூ.1,000 முதல் ரூ.3,500 வரை குறைந்து விட்டது.
- கட்டுமான பொருளான சிமெண்ட் வரி 28-ல் இருந்து 18 ஆக மாறி இருப்பதால் மூடைக்கு ரூ.40 வரை குறைகிறது. அதே நேரத்தில் கம்பிகள் ஏற்கனவே இருக்கும் 18 சதவீதத்தில் இருப்பதால் அதன் விலையில் மாற்றம் இல்லை.
- சிகரெட், புகையிலை, ஆடம்பர கார்கள் ஆகியவற்றின் வரி 28 சதவீதத்தில் இருந்து 40 சதவீதம் ஆகி விட்டதால் அதன் விலை எல்லாம் அதிகரிக்கும்.

இந்த விலை குறைப்பை கண்காணிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பொருட்களின் விலை குறையாமல் அதிக விலை வசூலிக்கப்பட்டால் மக்கள் நேரடியாக புகார் அளிக்க நுகர்வோர் புகார் ஒருங்கிணைந்த இணையதளம் https://consumerhelpline.gov.in மற்றும் தேசிய நுகர்வோர் உதவி எண் 1800-11-4000 மற்றும் 1915 ஆகியவற்றில் சிறப்பு பிரிவு திறக்கப்பட்டு உள்ளது. செல்போனில் இருந்து 14404 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தியும் அனுப்பலாம்.

### ஊடக சந்திப்பை ரத்து செய்த

# பாகிஸ்தான் அணிக்கு அபராதம் விதிக்க வேண்டும்: கவாஸ்கர்



அபுதாபி, செப். 22-

ஊடக சந்திப்பை ரத்து செய்த பாகிஸ்தான் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அபராதம் விதிக்கலாம் அல்லது போட்டி முடிவுகளின் பட்டியலில் ஒரு புள்ளியை குறைக்கலாம் என்று கவாஸ்கர் கூறியுள்ளார்.

**எளிதில் வெற்றி...**

ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் கடந்த 14-ந் தேதி நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய அணி எளிதில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் டாசின்போது இரு அணி கேப்டன்களும் கை கொடுத்துக் கொள்ளவில்லை. போட்டி முடிந்த பிறகும் இந்திய வீரர்கள் கை குலுக்க மறுத்து விட்டனர். கை குலுக்காமல் சென்றதால் பாகிஸ்தான் அணி கடும் அதிருப்தி அடைந்தது.

**பாக். மிரட்டல்...**

இந்த விவகாரம் சர்ச்சையானதால் இதற்கு பொறுப்பாக போட்டி நடுவர் ஆண்டி பைகிராப்டை (ஜிம்பாப்வே) நீக்க வேண் டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் ஐ.சி.சி.யிடம் (சர்வதேச கிரிக் கெட் கவுன்சில்) முறையிட்டது. தங்களது இந்த கோரிக்கையை ஏற்கா விட்டால் ஆசிய கோப்பையில் இருந்து விலகுவோம் என்றும் பாகிஸ்தான் மிரட்டல் விடுத்தது.

**ஐ.சி.சி. நிராகரிப்பு...**

பைகிராப்ட்டை நீக்குமாறு பாகிஸ்தான் வாரியம் 2 முறை விடுத்த கோரிக்கையை ஐ.சி.சி. நிராகரித்தது. இந்த பிரச்சினையை தீர்க்க பாகிஸ்தான் கேப்டன், பயிற்சியாளர், அணி மேலாளர் ஆகியோருடன் போட்டி நடுவர் பைகிராப்ட் சந்தித்து பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

**ஊடக சந்திப்பு ரத்து...**

இந்த கூட்டத்தில் பைகிராப்ட் வருத்தம் தெரிவித்ததாக தகவல் வெளியானது. இதனால் போட்டியில் இருந்து விலகும் முடிவை பாகிஸ்தான் கைவிட்டது. இந்த பிரச்சினையால் பாகிஸ்தான்-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் கடந்த 17-ந் தேதி மோதிய ஆட்டம் 1 மணி நேரம் தாமதமாக தொடங்கியது. ஆசிய கோப்பை போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் நேற்று மீண்டும் மோதின. ஒவ்வொரு போட்டிக்கு முன்பும் இரு அணிகளின் கேப்டன்கள் அல்லது பயிற்சியாளர்கள் செய்தியாளர்களை சந்திப்பது வழக்கம். இந்தியாவுக்கு எதிரான போட்டிக்கான ஊடக சந்திப்பை பாகிஸ்தான் அணி ரத்து செய்தது. இந்த தொடரில் பாகிஸ்தான் அணி இதுமாதிரி செயல்படுவது 2-வது முறையாகும். இதற்கு முன்பு ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு எதிரான ஆட்டத்தின் போது ஊடக சந்திப்பில் இருந்து விலகியது.


**அபராதம் விதிக்க...**

இந்த நிலையில் நிருபர்கள் சந்திப்பை ரத்து செய்த பாகிஸ்தானுக்கு இந்திய அணியின் முன்னாள் கேப்டனும், டெலிவிஷன் வர்ணனையாளருமான கவாஸ்கர்ர கண்டனம் தெரிவித்துள்ளார். இதற்காக பாகிஸ்தானுக்கு அபராதம் விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார் இது தொடர்பாக கவாஸ்கர் கூறியதாவது:- பாகிஸ்தான் அணி எந்த யோசனையில் இருக்கிறது என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் என்னை பொறுத்தவரை பத்திரிகையாளர் சந்திப்பு கட்டாயமாகும். ஏதேனும் இருந்தால் அதை ஊடகங்களில் தெரிவிப்பது அவசியமாகும்.

**ஒரு புள்ளியை...**

பாகிஸ்தான் தங்களிடம் பகிர்வதற்கு எதுவும் இல்லை என்று நினைக்கலாம். பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் நக்விதான் ஆசிய அமைப்பின் தலைவராக செயல்படுகிறார். ஊடக சந்திப்பை ரத்து செய்த பாகிஸ்தான் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அபராதம் விதிக்கலாம் அல்லது போட்டி முடிவுகளின் பட்டியலில் ஒரு புள்ளியை குறைக்கலாம். இவ்வாறு கவாஸ்கர் கூறியுள்ளார்.

## தமிழக வீரர் தங்கம் வென்றார்




உலக ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் சீனாவில் நடந்து வருகிறது. இதில் நடைபெற்ற 42 கி. மீ ஸ்கேட் மாரத்தானில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் வீரர் ஆனந்த்குமார் வேல்குமார் (22) தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

இந்த போட்டி தொடரில் இவர் பதக்கம் வெல்வது இது 3-வது முறையாகும். இவர் ஏற்கனவே ஒரு தங்கம் (1,000 மீ ஸ்பிரிண்ட் போட்டி) மற்றும் ஒரு வெண்கல பதக்கம் (500 மீ ஸ்பிரிண்ட் போட்டி) வென்றிருந்தார்.

### ‘எனக்கும் ஒரு நேரம் வரும்’

# ஆசிய கோப்பை தேர்வின்மை குறித்து ஜெய்ஸ்வால் கருத்து



மும்பை, செப். 22-

‘எனக்கும் ஒரு நேரம் வரும்’ என்று ஆசிய கோப்பை தொடருக்கு தேர்வாகாதது குறித்து ஜெய்ஸ்வால் கருத்து தெரிவித்துள்ளார்.

**5 அரைசதங்கள்....**

ஷுப்மன் கில்லை ஒரு பிராண்ட் ஆக உயர்த்த வேண்டும் என்று ஆசியக் கோப்பை அணியில் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அவரோ 2 போட்டிகளிலும் ஒன்றும் தேறவில்லை. இந்நிலையில், யஷஸ்வி ஜெய்ஸ்வால் அணியில் இருந்தால் எப்படி இருக்கும் என்ற பேச்சுக்கள் எழுந்து வருகின்றன. ஜெய்ஸ்வாலும் அது குறித்து வெளிப்படையாகப் பேசியுள்ளார். 23 சர்வதேச டி20 போட்டிகளில் ஜெய்ஸ்வால் 723 ரன்கள் 164% ஸ்ட்ரைக் ரேட்டுடன் எடுத்துள்ளார். ஒரு சதம் 5 அரைசதங்கள் என்று நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார்.

**கவனம் செலுத்துவேன்...**

ஆனால் தான் ஆசியக் கோப்பை தொடரில் இல்லாதது, தன்னைப் பாதிக்கவில்லை என்று கூறும் ஜெய்ஸ்வால், “முடிவுகள் அணிச்சேர்க்கையைப் பொறுத்து எடுக்கப்படுகின்றன. இவையெல்லாம் தேர்வுக்குழுவினர் கையில் உள்ளது. நான் என்னால் செய்ய முடிவதைச் செய்வேன். என் நேரம் வரும்போது அனைத்தும் சரியான இடத்தில் நிலைபெறும். நான் என் பேட்டிங்கை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவேன். கடினமாக உழைக்க வேண்டியது தான். மற்றவை தானாக நடக்கும்.” என்கிறார் யஷஸ்வி ஜெய்ஸ்வால்.

### நடிகர்-நடிகைகள் மீது அவதூறு பரப்பினால் சிறை:

# நடிகர் சங்க பொதுக்குழு கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றம்



சென்னை, செப். 22-

தென்னிந்திய நடிகர் சங்க 69-வது பொதுக்குழு கூட்டம் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கத்தில் சங்க தலைவர் நாசர் தலைமையில் நேற்று நடந்தது. கூட்டம் தொடங்கியதும் மறைந்த கலைஞர்கள் டெல்லி கணேஷ், சரோஜா தேவி, ராஜேஷ், மனோஜ் கே.பாரதி, ரோபோ சங்கர் உள்பட 70-க்கும் மேற்பட்ட கலைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நடிகைகள் லதா, லட்சுமி, கோவை சரளா உள்ளிட்ட பெண் நிர்வாகிகள் குத்து விளக்கு ஏற்றி கூட்டத்தை தொடங்கி வைத்தனர். பொதுச் செயலாளர் விஷால் வரவேற்றார். 2024-25-ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை துணைத்தலைவர் கருணாஸ் வாசித்தார். த்த கலைஞர்களை கவுரவிக்கும் பொருட்டு 5 உறுப்பினர்களுக்கு சங்கரதாஸ் சுவாமிகள் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

கூட்டத்தில் நடிகர் சங்கத்தின் புதிய கட்டிட திறப்பு விழா மற்றும் நிதிநிலை குறித்து பொருளாளர் கார்த்தி பேசினார். நிர்வாக செயல்பாடுகள், சங்க வளர்ச்சிக்கு நிதி திரட்டுதல் மற்றும் நிர்வாகத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்து பொதுச் செயலாளர் விஷால் பேசினார். இதைத் தொடர்ந்து சங்கத்தின் தலைவர் நாசர் தலைமை உரையாற்றினார். கூட்டத்தில் பழம்பெரும் நடிகை எம் .என்.ராஜத்துக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. பத்மபூஷன் விருதுபெறும் நடிகர் அஜித்குமார், நடிகை ஷோபனா ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தேசிய விருது பெற்ற எம்.எஸ்.பாஸ்கர், ஜி.வி.பிரகாஷ், ஊர்வசி ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர். கூட்டத்தில் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் துணை முதலமைச்சராக பொறுப்பேற்றதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நடிகர் சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் உறுப்பினர்களின் நலனுக்காகவும் அனைத்து வகையிலும் ஆதரவளித்து உறுதுணையாக இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சங்க உறுப்பினரும், துணை முதலமைச்சரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

சிம்பொனி இசை அமைத்த இசைஞானி இளையராஜாவுக்கு பாராட்டு விழா நடத்திய தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. நடிகர் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி வழங்கிய ரஜினிகாந்துக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

பொதுக்குழு கூட்டத்தில் அம்பிகா, ரேகா, வடிவேல், ஸ்ரீமன், முத்துக்காளை, கானா பாலா, சாய் தன்சிகா, தங்கதுரை மாறன் உள்பட பலர் கலந்து கொண்டனர். துணைத் தலைவர் பூச்சி முருகன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் முன்னணி நடிகர்-நடிகைகள் பலர் பங்கேற்காதது குறித்து வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

சமூக வலைதளங்களில் செயல்படும் யூடியூப் சேனல்களில், நமது சங்கத்தை பற்றியும், நமது சங்க உறுப்பினர்கள் பற்றியும் அவதூறான செய்திகளை பரப்புபவர்களுக்கு 3 மாத கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்க வேண்டும். மன உளைச்சலுக்கு உள்ளான நமது சங்க உறுப்பினருக்கு அந்த நபர் ரூ.3 லட்சம் மான நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க வேண்டும். அவதூறு செய்தியை பதிவேற்றம் செய்யும் சமூக வலைத்தள சேனல் நிறுவனம் நிரந்தரமாக முடக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவை உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 22.09.2025 முதல் 28.09.2025 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத தன வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். வாடிக்கையாளரிடம், நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். பிரபலமானவர்களின் அன்பும், நட்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

பரணி --

இந்த வாரம் அரசு பதவியில் உள்ளவர்கள் தங்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, தங்கள் பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு நல்லது. தொழிலில் உற்பத்தி பாதிப்புகள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீடு, கடை வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் லாபம் தரும். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். திடீர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். சிலருக்கு ஆடம்பரச் செலவுகள் மூலம் பண முடை ஏற்படலாம். அச் சமயங்களில், உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். அரசுப் பணியாளர்களுக்கு உயர் அதிகாரிகளால் நன்மைகள் ஏற்படும். அவர்களின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களில் தடைகள், வீண் அலைச்சல்கள் ஏற்படும். சிலருக்கு எதிரிகள் பணமும் வந்து சேரும். தொழிலில் எதிர்பார்த்தபடி ஆதாயங்கள் ஏற்பட்டு பொருளாதார உயர்வில் முன்னேற்றம் ஏற்படும். பூஜை வழிபாடுகள் மூலம் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். பயணத்தின் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் நல்ல மனிதர்களின் தொடர்புகள் மனதில் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவும். வாழ்க்கையில் உங்கள் திறமையால் நல்ல முன்னேற்றங்களை அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். வியாபாரத்தில் புதிய திட்டங்களைத் தீட்டி இலாபத்தை அதிகரிக்க முயல்வீர்கள். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். அடிக்கடி கோபப்படுவது குறைந்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தாய்வழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். எதிரிகளை சுலபமாக வெல்லும் திறன் ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு.

ரோகிணி –

இந்த வாரம் விருந்தினர் வருகையால் வீட்டில் சந்தோஷம் பெருகும். சினிமா, பொழுது போக்குதல் எனச் செலவுகளுக்கும் குறைவிருக்காது. தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். குழந்தைகளுக்குச் செலுத்த வேண்டிய கல்லூரிக் கட்டணங்களுக்கான வங்கி உதவிகளுக்கு முயற்சித்தால் தேவையான கடன் உதவிகள் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் எப்போதும் பணம் விஷய சிந்தனையுடன் இருப்பார்கள். கோபத்தை அடக்கிக் குடும்பத்துடன் அனுசரித்துப் போவது நல்லது. அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சில விஷயங்களில், சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். புதிய சாதனைகள் புரிந்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவார்கள். தன வருமானம் கூடும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சம்பந்தமான நற்செய்திகள் வரும். விற்பனைத் திறமைகளைக் காட்டி தங்கள் இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். அரசு அதிகாரிகள் சந்திப்பு அனுகூலமாக இருக்கும். புதிய பெண்களின் நட்பு மனக் களிப்புத் தரும். மனைவியிடம் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்கவும். சிலருக்கு மன சஞ்சலங்கள், அலைச்சல்களும் ஏற்படலாம். திடீர் செலவுகள் அதிகரிக்கும். வாரக் கடைசியில் புதிய முயற்சிகள் மூலம் தனவரவு அதிகரித்து எல்லாம் நன்மையாகவே நடக்கும்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் உங்களுக்கு எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான பணவரவு அதிகரித்து மனமகிழ்ச்சி கூடும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும், பெரிய மகான்களின் தரிசனம் கிடைக்கும். பணிபுரியும் நண்பர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். சாதுக்களின் தரிசனம் மற்றும் புண்ணிய கதைகள் கேட்டல் என பொழுது பக்தி மயமாக கழியும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். சிலருக்கு வியாபாரப் போட்டிகள் காரணமாக வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். விற்பனைப் பிரதிநிதிகள் தங்கள் தனித்திறமைகள் மூலம் புதிய இலக்குகளை எட்டி அதிக இன்சென்டிவ் மற்றும் பாராட்டு பெறுவர்.

திருவாதிரை –

இந்த வாரம் இறை தரிசனத்தால் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் அடைவீர்கள். உங்களுக்கு பணம் சம்பாதிப்பதில் எப்போதும் இல்லாத அளவுக்கு ஊக்கம் ஏற்படும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலமான நடவடிக்கைகளால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்க தாமதம் ஏற்படும். சிலருக்கு பூமி, வீடு என அசையாச் சொத்துக்கள் சேரும். காவல்துறை மற்றும் இராணுவப் பணியாளர்கள் பல சாகசங்களை நிகழ்த்துவர். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் மனக் கசப்புக்களை தவிர்க்கலாம். அரசு பணிபுரியும் பெண்கள் அதிகாரிகளிடம் அனுசரித்துச் சென்றால் முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்குத் தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். வேலையில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். பிறந்த நாள் விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். சிலருக்கு அரசு வகைத் தொல்லைகள் ஏற்படும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் உங்களுக்கு இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். எறும்பை ஒத்த, உங்கள் சுறுசுறுப்பு மிக்க செயல்பாடுகளை கண்டு அனைவரும் பாராட்டுவர். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து, எதிர்பார்த்தபடி தனவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடமிருந்து வெகு நாளாக எதிர்பார்த்திருந்த அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் தடங்கலின்றி வந்து சேரும். சினிமா, கேளிக்கை விடுதிகள் என ஆரவார மிக்க சூழலில், மகிழ்ச்சி பொங்க, விருந்து உபசாரங்களும் அதில் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி கரமான சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். விருந்தினர் வருகை ஆனந்தம் அளித்தாலும், செலவுகள் அதிகரிக்கும்.

பூசம் –

இந்த வாரம் உங்களுக்கு நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். பண விஷயங்களில் யாரையும் நம்பி ஏமாறாமல், மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. தீவிர முயற்சிக்குப் பின், இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் பயணத்தில் துன்பமும் ஏற்படும். கடன் கொடுத்தவர்கள் கெடுபிடி செய்வார். தொழில் விஷயமாக திட்டிய முக்கிய திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் யாவும் அனுகூலமாக முடியும். தொடர் முயற்சி காரணமாக, வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

ஆயில்யம் –

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். மனதுக்குப் பிடித்த மங்கையுடன் நட்பு ஏற்படும். கோடை விடுமுறையில் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். அரசு அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பலன்களை அடைவார்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு மூலம் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். ஆயினும், எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் தொலை தூரச் சுபச்செய்திகள் எதிர்பார்க்கலாம். பெரியவர்கள் உதவியால் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அரசுப் பணியில் பதவி உயர்வு எதிர்பார்க்கலாம். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். வேலைப்பளு காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது.

பூரம் –

இந்த வாரம் உங்களுக்கு பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் பல ஏற்படும். நல்ல குரு வாய்க்கப் பெற்று அனைத்து வழிகளிலும் அறிவுத் தெளிவு ஏற்படும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்தபடி அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைத்துப் புகழும் ஓங்கும். வாக்கு வன்மை ஓங்கி, அதன் மூலம். ஆதாயம் அடைவீர்கள். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் நீங்கள் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். வீட்டிலும் வெளியிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். உங்கள் தேவை அறிந்து, நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் வெற்றிகரமாக முடியும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். பணிபுரியும் பெண்கள் தங்கள் அலுவலகத்தில் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை சுலபமாக அடைவீர்கள்.

அஸ்தம் –

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். அதன் காரணமாக சுபச்செலவுகள் கூடி, அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரும். அரசு பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். சில நேரங்களில் சுறுசுறுப்பான நிலையும், மனோபயம் நிலவும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பரிபூர்ண ஒத்துழைப்பு கிடைக்கும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். சுபகாரிய செலவுகள் ஏற்படும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான முன்னேற்பாடுகளில் இல்லமே விழாக்கோலம் பூ ணு ம். திடீரென ஏற்படும், வியாபார சம்பந்தமான பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டும் கிடைக்கும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் பணியில் இட மாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

சுவாதி –

இந்த வாரம் சம்பாதிக்கும் திறன் மேம்படும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். மகான்கள் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்களை எதிர்பார்க்கலாம். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அதன் காரணமாக தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். சில மாணவர்கள் மிகப் பெரிய சாதனைகள் புரிவார்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் திருமணம் கைகூடி வரும். பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்படும் அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. வியாபாரத்தில் கடின உழைப்பால் மட்டுமே நல்ல லாபம், அதிக பலனோ கிடைக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

அனுஷம் –

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பெண்களுக்கு பணியிடத்தில் மற்றவர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். தங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும். ஏமாற்றத்தை தவிர்க்க வியாபாரிகள் தங்கள் கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

கேட்டை –

இந்த வாரம் வாழ்க்கையில் எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பதவி உயர்வு எனும் காற்று உங்கள் பக்கம் வீசும். துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்றபடி, உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். வீண் செலவுகளை குறைத்து பணத்தை சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். வீட்டில் வசதிகளைப் பெருக்கி கொள்வீர்கள்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். சிலருக்கு எல்லா விஷயத்திலும் ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். உயர்ந்த மனிதர்களின் நட்பு கிடைத்து வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் உழைப்பால் உற்பத்தி பெருகி லாபம் அதிகரிக்கும்.

பூராடம் –

இந்த வாரம் அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி வீடு மூலம் லாபம் ஏற்படும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. சிலருக்கு சோம்பேறித்தனம் அதிகரிக்கும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்ப்பு படி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் சீரான பொருளாதார உயர்வால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நெருங்கிய உறவுகள், அன்பு நண்பர்கள் அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத் தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் கோடை விடுமுறைக்கு கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசத்திற்குச் சென்று மனம் மகிழ்வார். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் செல்வ நிலையும் உயரும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும்.

திருவோணம்-

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பும் உற்சாகத்தைத் தரும். சிலர் கோடைக் கொண்டாட்டமா குடும்பத்துடன் இன்பச் சுற்றுலாக்கள் சென்று மகிழ்வர். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்கு அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் ஏற்படும். அரசு ஊழியர்களுக்குக் கீழே பணிபுரிபவர்களை கட்டளை இடும் படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். மேற்படிப்புக்கான புதிய கல்லூரிகளைத் தேடி அலையும் படியான நிலை ஏற்படும். கல்விச் செலவுகள் கூடும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபச் செய்திகள் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க, அனுசரித்துச் செல்வது நல்லது. ஒளிமயமான எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். அன்பு உறவுகள் வருகையால் ஆனந்தம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். கோடைகாலப் பயணங்கள் குளுமை தரும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். எதிர்பாராத தனவரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம்.

சதயம்-

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். போதுமான தனவரவு இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். அன்புமிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். வியாபாரிகள் நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால் அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். அதில் வெற்றியும் அடைவர். நல்லவர்களுடன் தொடர்புகள் ஏற்பட மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். வியாபார விரிவாக்கத்தால் கிடைக்கும் லாபம் சிறப்பானதாக இருக்கும். மாணவர்கள் தங்களுக்கு புதிய கல்லூரிக் கனவுகள் திளைப்பர். விடுமுறைக் காலத்தை முகநூல் மற்றும் இணையதளங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சி அடைவர். அரசியல்வாதிகள் உங்களை சார்ந்தவர்களுக்கு நல்லது செய்வதன் காரணமாக புகழ் பெறுவர். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்வது நல்லது.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பணவரவு அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும் வழக்குகளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். விஐபி களின் நட்பின் மூலம் ஆதாயங்கள் பெறும் நிலை உருவாகும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி தனை அனுபவிப்பீர்கள். உங்கள் இல்லத்தில் நீண்ட இடைவேளைக்குப் பிறகு மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். ஆழ்ந்த மனக்கவலைகள் கூட அன்பு மனைவியின் அரவணைப்பால் குறையும். விடுமுறைக் காலமாதலால் வீட்டில் குழந்தைகளின் சேட்டை, செயல்பாடு கண்டு உங்கள் முகத்தில் புன்னகையும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ரக வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். வீட்டில் திருமணம் போன்ற சுப மங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

ரேவதி-

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். நல்ல புத்திர பாக்கியம் ஏற்பட்டு குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். ஞானிகள் மற்றும் பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். பக்கத்து வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் இளைஞர் அணி அலுவலகம், முத்தமிழறிஞர் கலைஞர் சிலை, கலைஞர் நூலகம் ஆகியவற்றை அமைப்பதற்காக இளைஞர் அணி துணைச்செயலாளரும், ஈரோடு மக்களவை தொகுதி உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் ஏற்பாட்டில் இளைஞர் அணி அறக்கட்டளை பெயரில் வாங்கப்பட்டுள்ள இடத்துக்கான ஆவணங்களை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்து பெற்றார். இதில் மாநில இளைஞர் அணி துணைச்செயலாளர் ப.அப்துல்மாலிக் உடனிருந்தார்.

# சென்னைக்கு கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டத்தால் 20 லட்சம் பேருக்கு பயன்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, செப். 22-

சென்னை மாநகருக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம் மூலம் சென்னையின் அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் வளசரவாக்கம், ஆலந்தூர், அடையார் மண்டலங்கள், தாம்பரம் மாநகராட்சியின் குன்றத்தூர் மற்றும் திருப்பெரும்புதூர் நகராட்சிகளில் உள்ள 20 லட்சம் பொதுமக்கள் பயன்பெறப் போகின்றனர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார். மேலும், அனைவருக்கும் தரமான குடிநீர் வழங்குவோம் என்று சொன்னோம் அதை செய்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், செம்பரம்பாக்கத்தில் 66 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சென்னை மாநகருக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

இந்த நிலையில் இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

அனைவருக்கும் தரமான குடிநீர் சொன்னோம்... செய்கிறோம். செம்பரம்பாக்கத்தில் இருந்து, சென்னை மாநகருக்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகத்தைத் தொடங்கி வைத்தேன்.

இதனால், சென்னையின் அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் வளசரவாக்கம், ஆலந்தூர், அடையார் மண்டலங்கள், தாம்பரம் மாநகராட்சியின் குன்றத்தூர் மற்றும் திருப்பெரும்புதூர் நகராட்சிகளில் உள்ள 20 இலட்சம் பொதுமக்கள் பயன்பெறப் போகின்றனர். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலினை பூந்தமல்லியை சார்ந்த 8-ம் வகுப்பு மாணவி பிரக்யா ஜெயின் என்பவர் முதல்வரை நேரில் சந்திக்க வேண்டும் என்று கடிதம் அளித்தார். இதனையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு நேற்று முகாம் அலுவலகத்தில் அம்மாணவியை நேரில் வரவழைத்து உரையாடி திருக்குறள் புத்தகத்தை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

# தென்பெண்ணை ஆற்றில் வெள்ள அபாய எச்சரிக்கை

புதுச்சேரி, செப். 22-

சாத்தனூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு காரணமாக தென்பெண்ணை ஆற்றங்கரையோரத்தில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் சாத்தனூர் அணையின் நீர்வரத்து பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. 119 அடி கொள்ளளவு கொண்ட அந்த அணையின் நீர்மட்டம் தற்போது 116.75 அடியாக உயர்ந்துள்ளது. இதனால் அணையில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும் நீர்வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலாக தண்ணீர் திறக்கப்படும்என்று சாத்தனூர் உப கோட்டம் உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து தென்பெண்ணை ஆற்றங்கரையோரத்தில் உள்ள புதுச்சேரி கிராமங்களான மணமேடு, குருவிநத்தம், பரிக்கல்பட்டு, சோரியங்குப்பம், கொமந்தான் மேடு, உச்சிமேடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு புதுச்சேரி தாசில்தார் கோபாலகிருஷ்ணன் உத்தரவின்பேரில் வருவாய்த்துறை ஊழியர்கள் மோட்டார் சைக்கிள்களில் சென்று ஒலி பெருக்கி மூலம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்தனர். கால்நடைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று தங்குமாறு அவர்கள் அறிவுறுத்தினர்.



முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் 3-ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வினை முன்னிட்டு முத்தப்பன்பட்டியிலுள்ள அவரது நினைவிடத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், திருமங்கலம் நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணைத்தலைவர் ஆதவன் அதியமான் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அஞ்சலி செலுத்தினர்.



சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை அவரது இல்லத்தில் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

### மத்திய அரசின் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டால்தான்

# தமிழகத்திற்கு சமக்ரசிக்ஷா கல்வி நிதியை மத்திய அரசு வழங்கும்

## மத்திய கல்வித்துறை அமைச்சர் மீண்டும் திட்டவட்டம்

சென்னை, செப். 22-

மத்திய அரசின் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டால்தான் தமிழகத்திற்கு சமக்ர சிக்ஷா கல்வி நிதியை மத்திய அரசு வழங்கும் என்று தமிழக அரசுக்கு மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வலியுறுத்தி உள்ளார்.

சென்னை ஐஐடியில் நிருபர்களிடம் தர்மேந்திர பிரதான் கூறியதாவது: கல்வி நிதி விவகாரம் குறித்து இரண்டு வருடமாக நான் பேசி வருகிறேன். மீண்டும் சொல்கிறேன். இந்த விஷயத்தை தமிழக அரசு அரசியல் விவகாரமாக பார்க்கிறது. இது குறித்து பார்லிமென்டில் நான் பேசி இருக்கிறேன். தேசிய கல்விக் கொள்கையை நாடே ஏற்றுக் கொண்டது. மத்திய அரசு தமிழகத்தில் கல்விக்கு ஆண்டு தோறும் நிதி வழங்கி வருகிறது.

மதிய உணவு திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களுக்கு நிதி வழங்கி உள்ளது. இந்த ஆண்டு வரை தமிழக அரசுக்கு வழங்க வேண்டிய கல்வி சார்ந்த நிதியை மத்திய அரசு வழங்கி வருகிறது. கல்வி நிதி விவகாரம் தொடர்பாக தமிழக கல்வித்துறை அமைச்சர் மகேஷ், தி.மு.க. எம்.பி. கனிமொழி என்னை சந்தித்தனர். அவர்களிடம் நான் தெளிவாக கூறிவிட்டேன். மத்திய அரசின் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் சமக்ர சிக்ஷா கல்வி நிதியை மத்திய அரசு வழங்கும்.

மும்மொழி கற்பதில் என்ன பிரச்னை? தமிழக அரசு தனது அரசியல் நிலைப்பாட்டை மாணவர்களின் கல்வியின் மீது திணிக்க கூடாது. தமிழக மாநில பாடத்திட்ட பள்ளிகளில் தெலுங்கு, உருது, மலையாளம் என பல மொழிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. தாய்மொழியுடன் ஏதாவது இரு மொழிகளை கற்கலாம் என்பதே தேசிய கல்விக் கொள்கையின் நோக்கம். 3வது மொழியாக ஏதாவது ஒரு மொழியை படிக்க சொல்கிறோம். மத்திய அரசு எந்த மாநிலத்திலும் எந்த மொழியையும் திணிக்கவில்லை.

தேசியக்கல்வி 3வது மொழியை ஊக்குவிக்கிறது. மும்மொழி கொள்கையில் அரசியல் நிலைப்பாடு கூடாது. ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடு மாணவர்கள் 10 மொழிகள் கற்க வேண்டும் என்று கூறியுள்ளார். இவ்வாறு தர்மேந்திர பிரதான் கூறினார்.

### அஜித்குமார் கொலை வழக்கில்

# திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சி.பி.ஐ.

சிவகங்கை, செப். 22-

மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார், கோயிலுக்கு வந்த பெண் அளித்த நகை திருட்டு வழக்கு தொடர்பாக தனிப்படை போலீஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் தனிப்படை காவலர்கள் 5 பேர் சிபிசிஐடி போலீஸார் கைது செய்தனர். இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றக்கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் இறந்த அஜித் குமாரின் தாயார் உட்பட பலர் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணையின் போது அஜித்குமார் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி தமிழக அரசே உத்தரவிட்டது. இதையடுத்து சி.பி.ஐ. விசாரணையை முடித்து ஆக.20-க்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதன்படி சி.பி.ஐ. விசாரணை நடத்தி ஆக.20-ல் ஆன்லைன் வழியாக குற்றப்பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில் தனிப்படை வேன் ஓட்டுனர் 6-வது குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருப்பதாக சி.பி.ஐ. தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவுப்படி ஒரு மாதத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததற்காக சி.பி.ஐ.க்கு நீதிபதிகள் பாராட்டு தெரிவித்தனர்.

இந்நிலையில் அஜித்குமார் வழக்கில் சி.பி.ஐ. தாக்கல் செய்த முதல் கட்ட குற்றப் பத்திரிகையை நீதிபதி திருப்பி அனுப்பினார். அதில் சில குறைபாடுகள் இருப்பதாகவும், அந்த குறைபாடுகளை சரிசெய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சி.பி.ஐ.-க்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மதுரை தலைமை குற்றவியல் நீதிபதி செல்வபாண்டி முன் நேற்று முன்தினம் மீண்டும் வந்தது. அப்போது சிறையில் உள்ள 5 தனிப்படை காவலர்கள் பலத்த பாதுகாப்புடன் ஆஜர்படுத்தப்பட்டனர். 6-வது குற்றவாளியாக சேர்க்கப்பட்ட டிரைவர் ராமச்சந்திரனும் நீதிபதி முன் ஆஜரானார். சி.பி.ஐ. தரப்பில் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. தனிப்படை காவலர்கள் 6 பேருக்கும் சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கையின் நகல் வழங்கப்பட்டது. பின்னர் 6 பேருக்கும் குற்றப் பத்திரிகையை படித்து பார்க்க அவகாசம் வழங்கி அடுத்த விசாரணையை வரும் 23-ம் தேதிக்கு தள்ளி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.



பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் முன்னாள் மேயர் கு.திரவியம் தலைமையில் பெத்தானியாபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.